Herein is given a copy of the inscription found in the wall to the south of Āvuḷśiṟaikoṇḍapiḷḷaiyār in Aruṇācalēśvarar temple in Tiruvaṇṇāmalai. It is dated Śaka 14—, Pramātīca year, Wednesday, the tenth day of the bright fortnight of the Mēṣa month, when the moon was in the constellation Uttirāḍam. It relates to an agreement made by one Tiruvēṅgaḍanādar to pay yearly 400 Kalams of paddy, etc., to Aruṇācalēśvarar temple in Tiruvaṇṇāmalai for having got from the trustees of the said temple for 300 Paṇams the village of Mēlāṟṟūr situated on the southern bank of the river Śēyār.

Complete.

Beginning:

ஆ உள் சிறைகொண்ட பிள்ளையாருக்குத் தென்பக்கம் மதிளில் இருக்கிற சாசனத்துக்கு நக்கல்:—

சொஸ்தி-ஸ்ரீமன் மகாமண்டலேசுவர (. . . . .) ஸ்ரீகிருஷ்ணதேவ மகாராயர் பிருதிவிராச்சியம் பண்ணியருளாநின்ற சகார்த்தம் 14 . . . . . மேற் செல்லாநின்ற பிரமாதீச சம்(வத்சர)த்து மேஷநாயிற்றுப் புதவாரமும் பூர்வபட்சத்து(த்) தசமியும் பெற்ற உத்திராடநாள் உடையார் திருவண்ணாமலையுடைய நாயனார் கோவில் தானத்தார் இருங் கோளபாண்டியனுக்குப் பக்குர உடையார் செம்பியதரையர் திருமலைநயினார் மகனார் திருவேங்கடநாதருக்குக் காணிவிலை பிரமாணம் பண்ணிக் கல்வெட்டிக் கொடுத்தபடி. தேவமங்கல சீமையான பங்களநாடு சேயாற்றுத் தென்கரை மேலாற்றூர் கிராமம்.

End:

ஆனிவரையிலும் செலுத்துவதாகப் ப[த்து](ற்று)முறி வாங்கிக்கொள்ளக் கடவேனாகவும். இந்தப் பணம் முந்நூறும் நோட்டம் பார்க்குமுடையார் பார்வையாகக் கோவில்பண்டாரத்தில் பற்றிக்கொண்ட நமக்கு இது திரவியச் செலவு ஆவது ஆகவும்; இந்த மேலாத்தூர் காணியாட்சி நமக்கு விற்று ஒ[த்தி](ற்றி)க் கிரய[ம்] தானதன்மத்துக்கும் உ[ரு](ரி)த்தாக்காதேக

வும் . . . . தெய்வீகமானுல் அ . . . . . . ரணீ . . . . அனு மதியாதி கொள்ளக்கடவேனுகவும். மேலாத்தூர் காணியாட்சி சந்திரா தித்தவரையும் அனுபவித்துக்கொள்ளக்கடவேனுகவும். இத்தர்மத்திற்கு அகிதம் பண்ணினவர் கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்றதோஷத் தில் போகக்கடவோராகவும்.

இது பன்னயேச்சுவரரட்சை.

(கு-பு.)—

இது, அருணுசலேசுவரர் கோவிலிருக்கும் ஆவுள்சிரைகொண்ட பிள்ளை யார் சந்நிதியிலுள்ள சாசனம் ஒன்றின் நகல். ஷை கோயிலாரிடமிருந்து சேயாற்றுத் தென்கரையில் உள்ள மேலாற்றூரை 300-பணத்திற்குத் திரு வேங்கட நாதரென்பவர் வாங்கிக்கொண்டு, அதற்கு ஈடாக வருஷம் 400-கல நெல் முதலியன கொடுப்பதாக ஒப்புக்கொண்ட விஷயத்தைக் கூறுவது. இந்த நகலில் இது முற்றுமிருக்கிறது. கிருஷ்ணதேவராயர் அரசாண்ட சகம் 14 . . . . க்கு மேற் செல்லாநின்ற பிரமாதீசவூ சித்திரைமீ பூர்வபட்சத்துத் தெசமியும் உத்திராட நட்சத்திரமுங்கூடிய புதவார தினத் தில் எழுதப்பெற்றது.

(m) வழுகூர் ஈசுவரன்கோயில் சாசனம்.
VAḺUKŪR ĪSUVARANKŌYIL ŚĀŚANAM.

Fol. 63.

This is a copy of an inscription found in the Śiva temple at Vaḻukūr in Wandiwash taluk. It relates apparently to a sale-deed executed in Vikṛti year, Śaka 1332, during the reign of —pati Uḍaiyār, son of Vīralōcana Uḍaiyār.

Incomplete.

Beginning and End:

வெங்கோடு வந்தவாசிதாலூகா இரும்போடு நாடு வழுகூர் ஈசுவரன்கோ யில். சொஸ்திஸ்ரீ வீரலோசன ஒடையார் குமார . . . . . பதி ஒடை யாருக்குச் செல்லாநின்ற சகாப்தம் 1332-க்கு மேற்செல்லாநின்ற விக்கு ருதிவூ துலா நாயிற்று அமரபட்சத்து அஷ்டமியும்பெற்ற மிருகசீர்ஷத்து நாள் செயங்கொண்டசோழமண்டலத்து வெங்[கெண்ண] (குன்றக்)கோ [ஷ்](ட்)டத்து இரும்போட்டு நாட்டு வழுகூர் கலிகடிந்த சோழநல்லூர் மன் றுவக்களமாக்கெட்டு நிகமந்தகான விலையாவண கய்யெழுத்து.

யிவ்வூர் எந்தன் பாட்டன் செம்பியத்தரையனும் மேற்படி ம்ண்டலபுரு ஷன் காங்கயனும் காங்கற் காவியாட்சியான சாதினக்கிறையம் . . . .

(கு-பு.)—

இது இரும்போடுநாட்டு வழுகூர் ஈசுவரன் கோவிலுள்ள சாசனம் ஒன்றின் நகல். இது ஒரு கிரயசாசனம் எனத்தோன்றுகிறது. முற்றும் இல்லா மையால் இதன் முழுவிவரமுந் தெரியவில்லை. சகம் 1332-ல் இது எழுதப் பட்டது.

(n) வழுகூர் ஈசுவரன்கோயில்சாசனம்.

VALUKŪR ĪSUVARAN KŌYIL ŚĀSANAM.

Foll. 63b—64a.

This inscription relates to a certain grant made on Monday, the 12th of the bright fortnight of Mithuna, in Śaka 1341, Vikāri year, in the reign of Vīravijayabālarāya Uḍaiyār, son of Dēvārāya Uḍaiyār.

Incomplete.

Beginning :

சொஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவர (. . . . .) தேவராய [ஒ](உ)டையார் குமாரன் வீரவிசயபாலராய [ஓ](உ)டையார் பிருதிவிராச்சியம் பண்ணியருளாநின்ற சகாப்தம் 1341-க்கு மேல் செல்லாநின்ற விகாரிவருஷத்து மிதுன நாயிற்றுப் பூர்வபட்சத்துத் துவாதசியும் திங்கட்கிழமையும் பெற்ற கேட்டைநாள்

End :

[ஒ]சயங்கொண்ட சோழமண்டலத்து வெ[ங்](ண்)கு[ண](ன்ற)க் கோட்டத்து இரும்போடு நாட்டு வழுகூரான கலிகடிந்தசோழநல்லூர் மண்டானேகளமாகக் கேட்டு நிகமந்தகாணிவிலே ஆவணக்கை[யிம](யெழு)த்து நாட்டுகளுசையிபத்து ? நாட்டவரோம்.

(கு-பு.)—

இதுவும் வழுகூர் ஈசுவரன்கோயிலிலுள்ள சாசனம் ஒன்றின் நகல். ஷை கோவில் ஸம்பந்தமான ஆவணச்சீட்டு ஒன்றின் விவரத்தைக் கூறுவது. சகம் 1341-ல் இது எழுதப்பட்டது. முற்றுப்பெறவில்லை எனத் தோற்றுகிறது.

(o) அகத்தீசர் கோயில் சாசனம்.

AHATTĪŚARKŌYILŚĀSANAM.

Foll. 64a—65a.

Gives the copy of the inscriptions in stone to be found in the Śaiva shrine of Ahattīśar in Śivalapiṟaiyūr, near Chenji. It relates to the grant of the village of Śivalapiṟaiyūr to God Ahattīśar in the eighth year of the reign of Sundara Pāṇḍiya Dēvar.

Complete.

Beginning :

சேத்துப்பட்டுத் துக்கிடியில் சேர்ந்த செஞ்சிதாலூகா சிவலபிறையூர் அகத்தீசுவர(ர்) கோவில்மேற்பக்கம் கல்வெட்டுச் சிலாசாசனத்துக்கு ந[க்]கல்.

சுவஸ்திஸ்ரீ கோச்சிடப்பன்மரான திரு . . . . சக்கிரவர்த்தி ஸ்ரீசுந்தரபாண்டிய தேவருக்கு ஆண்டு 8-வதுக்கு எதிராண்டு மீனநாயிற்றுப் பூர்வபட்சத்துத் திங்கட்கிழமையும் அனுஷத்து நாள் செயங்கொண்ட சோழமண்டலத்துப் பல்[கோண](குன்றக்) கோட்டத்துச் சிங்கபுரநாட்டுச் சிவலபிறையூர் நாயனார் திரு அகத்தீசுவரமுடைய நாயனாருக்கு இவ்வூர் நான்கெல்லேக்குள் உட்பட்ட நஞ்சை புஞ்சை நிலம் மாவடை மரவடை தறி என்ற (. . . . .)திருநாமத்துக் காணியாகக் கொடுத்தோம்.

End:

இந்நாளில் விட்ட நிலம் நாலுமா உட்பட திருநாமத்துக் காணியாக முதல் அடங்கல் இறையிலியாகக் கொடுத்து, திருநாமத்துக் காணியாகக் கொடுத்தோம். செஞ்சிமலை பல்[கோணக்](குன்றக்) கோட்டத்து இப்படிக்குக் கல்லிலும் செம்பிலும் வெட்டி, சந்திராதித்தவரையும் அனுபவித்து . . . .

இப்படிக்கு

இ[வை](து) செயங்கொண்ட சோழபுரம் ராயன் எழுத்து
" அகம்படியவேளாளன் எழுத்து
" பன்னிகாட்டு வேளான் கையெழுத்து.

(கு-பு.)—

இது, செஞ்சிக்கு அடுத்த சிவலபிறையூரில் எழுந்தருளியிருக்கும் அகத்தீசுவரர் கோவிலிலுள்ள ஒரு சாசனத்தின் பிரதி. ஷை சிவலபிறையூரை அகத்தீசுவரருக்குத் தானஞ்செய்த விவரத்தைக் கூறுவது. சுந்தரபாண்டிய தேவருக்கு எட்டாவது ஆண்டில் இது எழுதப்பட்டதென்று தெரிகிறது. முற்றும் உளதாகவே தோற்றுகிறது.

R. No. 337.

Paper. 10¾ × 9½ inches. Foll. 80. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1916-17 from a MS. in the Library.

(*a*) வீரசிங்காதனபுராணச்சுருக்கம்.

VĪRAŚIṄGĀDANAPURĀṆACCURUKKAM.

Foll. 1*a*—78*b*.

A treatise describing the greatness of Vīraśaiva religion, the religious importance of Kumbakonam, and the history of the foundation therein of the Periya Maṭam, now known as Sāraṅgadēvar Maṭam, by Sadāśivadēśikar who is said to have emanated from one of the faces of Śiva, in addition to narrating certain leading incidents in the lives of Rēṇukar, Rēvaṇar, Malaiyamallar, Akalaṅkar, Oṭṭakkūttar, Sōmaśēkharar, and other persons. This work purports to be a summary of Vīraśiṅgādanapurāṇam which is a rendering in Tamil from the Kanarese original said to have been told to Vīraśiṅgarāyan by Sōmaśēkharadēśikar. The Tamil rendering referred to was made at the instance of Mahattudēśikar of Kumbakonam by Vēlaiyasvāmi of Perumattūr and by Umāpākar of Kōṭṭūr who presided in the Mutt at Tirtturaiyūr.

Complete.

Beginning:

கும்பகோணம் பெரியமடம் வீரசிங்காதன புராணச் சுருக்கம்.

தாது௵ சித்திரைமீ கவ.

ஸ்ரீமத் கும்பகோணம் பெரியமடம் வீரசிம்மாசனம் வீரபத்திரசுவாமி குருமூகூர்த்தம் ஆதிமுதல் இந்நேரம்வரைக்கும் நடக்கப்பட்ட வரலாறு. பொ[ழ்]த்தகம்.

ஸ்ரீமத் கும்பகோணம் பெரியமடம் வீரசிங்காதன புராணத்தில் சுருக்கமாய் எடுத்தெழுதினது.

உலகு ளோர்துதி குடந்தையம் பதியில்வாழ்ந் தோங்கி
யிலகு வீரசிங் காதன புராணம தியம்பத்
திலக வாணுதற் றிரிபுரை யீன்றருள் சீர்த்தி
யலகின் மாமதத் துயானைகாத தவனடி பணிவாம்.

தழை[ப்]பெ ரும்புகழ(த) தன்னடி யுன்னிடில்
பிழைத ரும்பொருள் யாவும் வீளைத்திடு
மழைம தர்க்கண மாதுமை நல்கிய
புழை நெடுங்கரப் போதக வேழமே.

ஸ்ரீகும்பகோணம் பெரியமடம் வீரசிம்மாசனம் சாரங்க சுவாமியார் குருமழையமல்லேசுவரப் பிரபு.

(* * * *)

வீரசைவ குருசோம சேகரதே சிகன்பாத மிலேச்சிப் பூவாள்
வீரநர சிங்கமன்னன் வினைவமஉற யாகமங்கள் விளம்பநாதி
வீரசைவ மிகுக்கவரன் மெய்ஞ்ஞான பீடமிதின் மேவலாலே [லே.
வீரசிங்கா தனமெனப் பேர் விளங்கிடுமென் றதன்பெருமை விளம்புறு

* * * *

திருந்து காரோ ணத்திறைதா டெரிசித் துபவா சமுஞ்செய்து
பொருந்து விழிக டியிலாமற் கங்குற் போது போக்கியினன்
பரிந்து தோன்று மறுநாணீர்ப் படிந்துள் ளளவு தானமளித்
தருந்தும் விருந்துக் கனமுதவி யதற்பி னரும்பா ரணஞ்செய்வார்.

தீதிலாச் சிவசீ வைக்கியமென் பதனைத்
திகழ்ந்திடும் வீயெனல் வித்தை
சேர்ந்ததில் ரமித்தல் செப்புமால் ரகாரஞ்
சிவனொடு கலத்தலே சைவ
மோதிலிவ் வகையா னமும் வீர
சைவனென் றேமறை யுரைக்கு
முவனகப் பூசை யுடையனும் வித்தை
யூடிலாய் மாயையை யொறுத்தே
நீதியிற் கைத்து நாயெனக் கண்டு
நெகிழ்த்துமுன் வருணமாஞ் சிவத்தி
னேசமா முத்தி யோன்வீர மகேச
னிகழ்ப்புறப் பூசையோ னநீ

ளாதர வீர சைவனே சடத்த
லத்தவ னளவிலாச் சனனந்
தணைநதபுண் ணியத்தாற் புனிதமாமனத்த
ஞதலாற் பிண்டநா மியுமாம்.

End :

பூரு வந்தனின் மக்கவீச் சுரமெனப் பொலிந்தே
மேரு வொப்பென விளங்கிடுங் கோயில்பள் ளியதாய்ச்
சாரு மாவிது சான்றுநந் தம்பிரான் சபைமுன்
பாரி தாமணி தூக்கிடப் பட்டுறும் பரிவால். (கசுகூ)

(* * * *)

* இகம தாகிய லாவிலா காவில்லல் லாகு
முகம தர்ரசூல் லாகியென் மந்திர மொழிதான்
மிகுமு யிர்க்குயி ராய்ப்பரப் பிரமமா மெனமே
தகுமல் லேசர்தாஞ் சாற்றினர் துருக்கர்க டமக்கு. (ககூஎ)

இன்னண முபசா ரங்க ளேய்ந்திடக் கங்கை மாது
துன்னிய பவத்தைத் தீர்த்துத் துலங்குமா மகத டத்தைப்
பொன்னணி புரத்தை யீசர் பொலிசின கரத்தைச் சூழ
மன்னியே வலம தாக வந்துமா மடத்தைச் சார்ந்தார். (கூாகூ0)

வயிரவ சமயத் தாரும் வாதினிற் றாழ்ந்தோ முள்ளச்
செயிரற வெம்மே லன்பு செய்கெனப் பணிந்து போன
ரயிரறும் புவியை யாளு மரசனும் விடைபெற் றன்பி
னுயிரவர் பாவிருத்தி யுற்றுவாழ் பதியைச் சேர்ந்தான். (கூாகூக)

Colophon :

மேல் எழுதப்பட்ட முன்னுதாரவுப்படி பொத்தகத்தில் சுருக்கமாயெழுதி னது. ஏடு 63-க்குப் பாடல் 328; தோத்திரம் 11 இதன் விவரம் . . . . :

(கு-பு.)—

இது பரமசிவனுடைய ஈசான முகத்திற் றோன்றிய சதாசிவதேசிகர் கும்பகோணத்தில் வீரசிங்காதனத்தில் வீற்றிருந்தருளிப் † பெரிய மடத்தை ஸ்தாபித்த சரித்திரத்தையும், இரேணுகர், இரேவணர், மழையமல்லர், அக ளங்கன், ஒட்டக்கூத்தர், சோமசேகரர் முதலியவர்கள் சரித்திரங்களையும் அவர்கள் ஒவ்வொருவரும்செய்த பல அற்புதச் செயல்களையும், கும்பகோ ணத்தின் பெருமைகளையும், வீரசைவ சமயத்தின் பெருமை முதலியவற்றை யும் விளங்கக்கூறுவது. சிறந்த நடையாலாயது.

---

* "லா இலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூல்லாஹி" என்பது வாக்கியம். (லா - இல்லை; இலாஹா - கடவுள்; இல்லல்லாஹு - கடவுளைத் தவிர; முஹம்மது - முஹம்மதென்பவர்; ரசூல் - தூதர்; உல்லாஹி - கடவு ளுடைய.)

† இது இப்பொழுது சாரங்கதேவர் மடமென்று வழங்கப்படுகிறது.

இவ்வரிய புராணம் ஆதியில் வீரசிங்கராசனென்னும் வேந்தன் விஞவச் சோமசேகரதேசிகர் போதித்தருளியபடி கன்னடபாஷையிலிருந்தமையால், அதனைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்று குடந்தை மகத்து தேசிகர் என்னும் பெரியார் விரும்பியபடி பெருமத்தூர் வேலையசுவாமிகளாலும், திருத்துறையூ ராதீனத்தவராய்க் கோட்டேரிலிருந்த உமாபாகரென்னும் பெரியாராலும் செய்யப்பட்ட வீரசிங்காதன புராணத்தின் சுருக்கமாகும். இதில் நூல்முற்றும் இருக்கிறது.

(b) குடந்தைப்பெரியமடத்து மடாதிபதிகளின் விவரம் முதலியன.

KUḌANDAI PERIYAMAḌATTU MAṬĀDIPATIKAḺIN VIVARAM MUDALIYANA.

Foll. 78*b*—79*a*.

Gives a list of some of the pontifical priests who occupied the Sārangadēvar Mutt at Kumbakonam together with the respective places in which they are said to have thrown off their mortal coil.

Beginning:

. . . . . குப்பிறகு ஸ்ரீநாயக்கரவர்கள் ராச்சியபாரம் பண்ணுகிற நாளையில் மடத்தில் இருந்த அதிகார மூர்த்திகள் :—

விசுவநாதமூர்த்தி
மகத . . . . சுவாமி
முத்துவீரசாமி
ருத்திரமணிய சுவாமி
குருபசவ சுவாமி
முருகசாமி மொ . . ங்கியில் சிவலிங்கலீலை.
வசவலிங்கசாமி
[ெ]கங்காதரசுவாமி
சோதிலிங்கசாமி
மல்லிகார்ச்சுனசுவாமி
சாரங்கசுவாமிகள்.

ஆக நாயக்கரவர்கள் நாளையிலிருந்த சுவாமிகள் பேர் நாமம்.

End:

சமாதி விவரம் :—

மலையாளம் கம்பத்தில்—க.
மதுரை சீமையில் கன்னிவாடியில்—க.
மேற்றங்கியில்—க.

மற்ற[து எங்](வர்களுக்குக்) கும்பகோணத்தில் சமாதிகள் நடந்த(ன).
ஸ்ரீபோசலவங்கிசத்தார் அதிகாரத்தில் :—

விசுவநாத சுவாமி.
சாத்திர வீரசாமி.
ருத்திரமணிய சுவாமி.

விருமதரனே (?) சாரங்கபாணி சுவாமி கோயம்புத்தூரில் சமாதிக . . . . காளயுத்தி . . . . க்கு முஸ . . . . . யிப்(பே)ப(ாது) நடக்கப் பட்டது. ருத்திரமணிய சுவாமிகள்.

(கு-பு.)—

இது, கும்பகோணம் சாரங்கதேவர் மடமென வழங்கும் பெரிய மடத்தில் மடாதிபதிகளாக இருந்தவர்கள் சிலரின் பெயரும், அவர்கள் சமாதியடைந்த இடம் முதலியனவும் இன்னவென விளக்குவது.

(c) குடந்தைப் பெரியமடத்துக்குள்ள ஆதரவு.
KUḌANDAI PERIYAMAḌATTUKKUḶḶA ĀDARAVU.

Foll. 79b—80b.

Gives a description of the properties belonging to the Periyamaṭam at Kumbakonam.

Apparently complete.

Beginning:

ஷெ மடத்தில் ஆதரவு.

சாலிவாகன சகாப்தம் 1551 . . . . வரு . . . . . த்தில் . . . வரு ஸ்ரீ[ெ]ரகுநாத நாயக்கரவர்கள் பிரதானி கோவிந்த தீட்சிதர் மாமக தீர்த்தம் படித்துறை சொச்சம் திருப்பணியும் மடத்து * ஆசாரம் கட்டிவைச் சதும், போசலவங்கிசத்தில் உள்ளூரில் நன்செய் வேலி ச. புன்செய் வேலி . . . . க்கு அர்த்தமானியத்துக்கு சி(ங்)காசனத்துக்(கு) . . தேரழுந்தூர் நன்செய் வேலி . . . ச (. . . . .)

End:

துரை நாளேயில் 16-பசலிவரைக்கும் வருமானம் வந்திருக்கிறது. மேல் பத்து பசலிவரைக்கும் வராமல் நிலுவை இருக்கிறது.

சீமை தேசங்களில் அங்கங்கும் ஊர்களுக்கு லிங்கதாரணமான பேர்க ளுக்குள்ளே விசாரணையும் நன்மை தின்மையும் பூசையும் இந்த விவரங்க ளுக்கு அங்கங்கே ம[ற்றுழா](னுஷ்யர்க)ள் வைச்சுப் பணம் தண்டலாகிறது. அதில் சிறிது வருகிறது. பாக்கி நிலுவையாயிருக்கிறது.

பூர்வீகம் சிலாசா[த](ச)னம் இரண்டு.

இந்த வருமானங்கள் மூன்மாமூல் பிரகாரம் வரும்படியாய்த் தயவுவைசசு நடப்பிக்கவேணுமென்று மெத்தவும் கோறிக் கேட்டுக்கொள்ளுகிறோம். மூன் மாமூல்படிக்கு நடப்பிக்கவேணும்.

தாதுவரு சித்திரைமீ.

(கு-பு.)—

இது கும்பகோணத்திலுள்ள பெரியமடத்துக்குரிய சொத்து முதலியவற் றின் விவரங்களைக் கூறுவது. முற்று மிருப்பதாகவே தோற்றுகிறது.

---

* ஆசாரம் = வாயில்.

R. No. 338.

Paper. 11 × 9½ inches. Foll. 61. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1916–17 from a MS. of the Library.

விவேகசாரம்.
VIVĒKASĀRAM.

A treatise bearing on Advaita-Vēdānta. The portion contained in this MS. deals with some topics such as Adyārōpam, Pañcakōśam, etc.

The work has been printed.

Incomplete.

Beginning:

விவேகசாரம் சாமானியமாய் நிரூபிக்கிறோம். அத்தியாரோப அபவாதம்.

அத்தியா[ரு](ரோ)பமாவது, ஒரு வஸ்து[வு] [ை]ம[த்தொ](ற்றொ)ன்றாகத் தோன்றுவது. எப்படியென்றால் :—சிளிஞ்சலிடத்தில் வெள்ளி, பழுதையிடத்திற் பாம்பு, கட்டையிடத்தில் கள்ளன், கானலில் தண்(ணீர்), ஆகாசத்தில் கறுப்பு எப்படி ஆரே[ரு](ரா)பிச்சுதோ அப்படி(ப்)போல நிட்பிரபஞ்ச ஆன்மாவிடத்தில் பி[ற](ர)பஞ்சாரோபமே அத்தியாரே[ரு](ரா)பம்.

இது அ[க்கியா](ஞ்ஞா)னத்தினுலே வந்[து](த)து. ஒரு அ[க்கி]ஞ்ஞானமே பி[ற](ர)கிருதியென்றும் மாயையென்று மவித்தையென்றும் தமசெனறும் சொல்லப்பட்டு, சீ[வா](வர்க)ள் கர்மபலம் பக்குவப்பட்டபோது ஈசுவரன் சத்துவகுண பிரதானமான மாயையுடனேகூடி நிமித்தகாரணனுச்சுது.

End:

ஆன்மாவை யல்லாமல் பஞ்சகோசங்களில்லையென்று எப்படி யறி[யு](கி)றதென்றால், மி[று](ருத்)திகையிலே ஆரே[ரு](ரா)பிக்கப்பட்ட கடம் மண்ணையன்றியில் வேறில்லை என்று அறிஞ்ச பிற்[ப்]பாடும், கடாதியினுடைய பி[றத](ரதீ)தியும் வி(ய)வகாரமும் எப்படி வரு[கு](கிற)தோ அப்படிப்போலே ஆ[ற்](ன்)மாவினிடத்தில் ஆரே[ரு](ரா)பிக்கப்பட்ட பஞ்சகோசங்கள் அதிஷ்டானமான ஆன்மாவை யல்லாமல் வேறில்லையென்று அறிந்தபோதைக்கும் பஞ்சகோசங்களுடைய பி[றத](ரதீ)தியும் வி(ய)வகாரமும் வரலாமே. இந்த விசாரத்துக்குப் பலனேதென்னில் :—ஆ[ற்](ன்)மா அவஸ்தாதி[றை](ர)யத்தில் அனுசூதன். பஞ்சகோசங்கள் அவஸ்தா தி[றை](ர)யத்தில் அனுசூதமாயிருக்க[யி](வி)ல்லை யென்று அறிவதே பலம்.

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

அத்வைதவிஷயமான இந்நூல் வாசுதேவமநநம் என்னும் பெயருடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இதனை இயற்றியவர் இன்னாரென விளங்கவில்லை. இந்தப்பிரதியில் அத்யாரோப அபவாதம் முதற் பஞ்சகோசமீறாகிய சிலபிரிவுகள் உள. முற்றுப் பெறவில்லை.

R. No. 339.

Paper. 10⅞ × 9½ inches. Foll. 20. Lines, 20 in a page. Tamil. Good.

Restored in 1916–17 from a MS. of the Library.

(a) கோமுத்திமாகாத்மியம்
KŌMUTTIMĀHĀTMIYAM.

Foll. 1*a*—4*a*.

Describes the holiness and religious importance of the place now called Tiruvāvaḍuturai in the Tanjore district. The reason why that place was called Gōmutti and the manner in which Ambikai, Mucukundan, Ahattiyar and Tiruñānasambandar obtained the grace and the blessings of Śiva in that place are explained herein. Nandipuram seems to be another name for Tiruvāvaḍuturai.

Incomplete.

Beginning :

திருக்கயிலாயச்சிலம்பில் நவசித்தர்கள் ஒருகாலத்திற் சென்றூர்கள் சிவனைத் [தெ]தரிசிப்பதற்காக. அப்பொழுது நந்திகேசுவரர் வாய்தலிற் றடைசெய்தார். அவர்கள் சி[ல](றிது)பொழுது காத்திருந்து சமயம்பார்த்து நந்திகேசுவரர் உத்தரவுப்படிக்கு உள்ளேபோய்த் [தெ]தரிசனஞ் செய்தார்கள் அப்பொழுது சிவபூசை செய்யச்சொல்லி யனுக்கிரகம்பண்ணிச், சோதிலிங்கமொன்று கொடுத்து, " பூமியிலே நாலவந்தீவிலே பரதகண்டத்திற் சோழதேசத்திற் காவேரிக்குத் தென்கரையிலே கோமுத்தித்தலமென்றெரு தலமிருக்கிறது. அதிலே போய்ப் பூசை செய்ய" வென்று கட்டளையிட்டருளினர்.

மேல் எழுதிய நவசித்தாளுங் கோமுத்தித்தல வரலாறு கேட்டார்கள். அதற்குச் சுவாமி அருளியது :—

முன் ஒருகாலையில் உமாமகேசுவரிக்குப் பசுத்துவம் வந்தது ; அப்பசுத்துவ முத்திபெற்றமையாற் கோமுத்திச் சேத்திரமென்றுயிற்று.

End :

இன்னுஞ் சுவாமி மாசிலாமணியார் அடியவர், இருடிகள், தேவர்கள், சித்தர்கள், வித்தியாதரர், திசைகாவலர் முதலியோருக்கு அனுக்கிரகஞ் செய்ததும் அவர்கள் செய்த திருப்பணிகளையும் எழுதி முடியாது ; இப்பொழுதும் மெய்யன்புடையவர்கட்கு அருள்செய்து எழுந்தருளியிருக்கிறூர்.

திருத்தோணிபுரத்திற் றிருவவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்த சுவாமிகட்கு உலவாக்கிழியாக ஆயிரம்பொன்னும் அனுக்கிரகம் பண்ணினர்.

(கு-பு.)—

இது, தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள திருவாவடுதுறையின் பூர்வ வரலாறுகளையும், அத்தலத்தில் அம்பிகை, முசுகுந்தன், அகத்தியர், திருஞானசம்பந்தர் முதலியவர்கள் வழிபட்ட விவரத்தையும், அதற்குக் 'கோமுத்தித்தலம்' என்ற பெயர்வந்த காரணமுதலியவற்றையும் விளக்குவது. இதை வசன நடையில் இயற்றியவர் பெயர் தெரியவில்லை. நூல் முற்றுப்பெறவில்லையெனத் தோன்றுகிறது.

(*b*) துறைசைமடத்துத்தம்பிரான்களின் பரம்பரை.

TUṞAIŚAIMAḌATTUTTAMBIRĀNKAḶIN PARAMPARAI.

Foll. 4*b*—10*b*.

Gives the genealogy and a brief account of the Śaiva priests who occupied the Tiruvāvaḍuturai Mutt, beginning from God Śiva and ending with Subrahmaṇyadēśikar, the 24th successor to the pontifical seat. In the end there is an extract in Sanskrit taken from the Upadēśa-kāṇḍa of the Śivasaṁhita of the Skāndapurāṇa in support of the statement that the succession line of these spiritual priests can be traced up to Śiva.

Beginning:

நீர்க்கடல் சூழ்ந்த பார்க்கணெண் டிசையினு
மேற்படு தென்றிசைப் பாற்படு கயிலையி
லெழுகுறு புட்ப கிரியா மறத . . . .
கிரிமகா கோளகிரிபிட் சாகிரி
யென்னுநாற் கிரியினு முன்னவ னுயிர்கட்
கன்னையு மத்தனுமாகவீற் றிருக்கு
நித்திய சுத்த நிராமய நிர்க்குண
சத்தி சமேத தற்பர சிற்பர
தயாபர வியாபகச் சச்சிதா னந்த
பராபர முதலாஞ் சதாசிவக் கடவுள்
கருணைமெய்ஞ் ஞான குருவடி வெடுத்து
மலைமக ணந்தி மாணுன் முனிவருக்
காகம மருளிப் பாகமிக் குறுதலிற்
றிருவுள மகிழ்ந்து பெருகபி டேகமுஞ்
செய்துபொன் மகுடங் குண்டலங் கண்டிகை
முத்தணி சத்தியஞ் சாமரஞ் சிவிகைகைப்
பற்று பவித்திரம் பாதுகை வாசிகை
(* * * *
சற்குரு மன்னரு மிப்புவித் தளர்வறப்
பொற்புறு பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெயின
மைகண்டங் கொண்ட வரன்றிரு வருளாற்
பொய்கண்டு நீங்குபு மெய்கண் டோங்கிய
மெய்கண்ட தேசிக மேலவர்க் கருளினர் ;

(* * * *)

உமாபதி சிவனுக் குதவின ரவைகளைத்
தமோமய மலமறச் சற்குரு வன்னவர்
மன்றவ ருருவமாம் வன்னமுற் றுணரா
நின்ற வருணமச் சிவாயநின் மலருக்
கருளின ரந்தப் பெரியமெய்த் தேசிகர்

End:

கல்வி கவி கொடை கருணையிவ் வனைத்து
மோருருக் கொண்டெனச் சீரிய றுறைசைவாழ்
மெய்ப்பொருட் சுப்பிர மணியதே சிகர்க்குக்
கொடுத்தனர் கொடுத்த விதற்குதா கரண
மிரட்டிய வொன்பான் கணக்குறு புராணத்
தீரைந் தாகு மிறைசிவ புராணத்
தியாருமுண் மகிழுஞ் சீருறுகாந்தச்
சிவசங் கிதையிற் செப்புப தேசமாங்
காண்டத் தருளிய காதைச் சுலோகமும்
நீண்டவர்க் கரியவ ருரைத்தநீ டாகமத்
தசிந்திய விசுவசா தாக்கியத் துள்ளவுங்
கசிந்தநெஞ் சினர்தொழக் கவின்பெற வரைகுதும்.

(கு-பு.)—

இது சிவபெருமானை முதலாகவுடைய திருவாவடுதுறை யாதீனத்துக்குரு மூர்த்திகளின் பரம்பரைவரலாறுகளை விளங்கக் கூறுவது. அப்பரம்பரையில் 24-மவரான சுப்பிரமணியதேசிக மூர்த்திகள் காலம் வரையிலுள்ள வரலாறுகள் இதிலுள்ளன. இப்பரம்பரைக்கு ஆதாரம் வடமொழிப் புராணங்களிலிருந்தும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

(*c*) சித்தாந்தசைவர்களின்உண்மைநிலை.
SIDDĀNTAŚAIVARKAḺINUṆMAINILAI.

Foll. 10*b*—20*a*. Fol. 20*b* is blank.

In this work, the origin of the Siddhāntāgāmas, the people who follow them, the differences between such followers and those who follow the Vēdas, called Vaidikarhaḻ are explained. This is a Tamil rendering by Aṇakkaṭṭāpputtūr Nayanappa Mudaliyār, nephew of Kandappa Mudaliyār from what was originally written in English by Muttayya Mudaliyār of Tiruvēṟkāḍu.

Complete.

Beginning:

இந்துக்களுடைய தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டாரச[ன்ன](ந்நி)திகளினுடைய பூருவோத்தரத்தைச் சேர்ந்த (பா)ஷியம். பராபரமாகிய சிவன் ஆதியில் (நி)ஷ்களமாயும் எங்கும் வியாபியாயுமிருந்துந் தராதலம் படைக்கத் தானினைந்தருளிய பஞ்சானனத்தொடுஞ் சதாசிவ மூர்த்தத்தைக்கொண்டார். அப்பஞ்சானனத்துள் ஊர்த்ததிருமுக மண்டலத்தினின்றும் சித்தாந்த ஆகமம் பிறந்தது; எனையவற்றின் அனேகஞ்

சாகைகளோடுங்கூடின சதுர்வேதம் பிறந்தன. (. . . . .) பிரமா தன் முகத்திலே பிராமணரையும் பிராமணஸ்திரீகளையும் புசத்தில் க்ஷத்திரிய(ர்களையும்) க்ஷத்திரிய ஸ்திரீகளையும், துடையில் வைசிய(ர்களையும்) வைசிய ஸ்திரீகளையும், பாதத்தில் சூத்திரர்(களையும்) சூத்திர ஸ்திரீகளையும் சிருட்டித்தார். அவர் பிரம, க்ஷத்திரிய, வைசியர்களுக்கு வேதங்களையும், சூத்திரர்களுக்குப் புராணங்களையும் சித்தாந்தாகமங்களையும் உபதேசித்தார். (. . . . .) சித்தாந்தாகமமென்பது தொடர்மொழி; அவைதாம் சித்தாந்தம், ஆகமமென்பன; சித்தாந்தமென்னும் பண்புச்சொல் கவுலவம், வகுளம், பாசுபதம் முதலிய ஆகமங்களினின்றும் வேறுக்கப்பட்டுவந்த ஆகமமென்ற சொல்லிற்கு முன்னிடையாய் வைக்கப்பட்டிருக்கிறது.

End :

சித்தாந்தாகமங்களும் நாலாசிரமத்தைக் கூறுகின்றன; அவை அவ்வாகமங்கள்கூறுங் கிரமப்படிக்குச் சதுர்வருணத்தாராலே அனுஷ்டிக்கப்படுவன. அவ்வாறு அனுஷ்டிக்கிறவர்களுக்குப் பெயர் குருக்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள் முதலாகியவர்கள் (. . . . .) க்ஷத்திரிய வமிசமும் வைசிய வமிசமும் சுத்தமாய்ப் போய்விட்டது; இந்தக் கலியுகத்திலே சதுர்வருணத்திலே முதலுங்கடைசியுமாகிய பிராமணுள் சூத்திராளென்கிற இரண்டு வருணமாத்திரம் இருக்கின்றன.

* * * *

இந்துக்களுடைய தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார[ச்சன்ன்](சந்தி)திகளினுடைய பூருவோத்திரமில்லாது முற்கூறிய பாஷ்'ய)த்தின் உண்மை[யை] விளங்(கு)கிறதற்குச் சாட்சிகள், (1) ஆலாஸ்யமகத்துவம், (2) வாயுஸம்(ஹி)தை, (3) சூதசங்கிதை, (4) பிரமாண்டபுராணம், (5) சிவஞானபோதம், (6) சித்தாந்த சாராவளி, (7) பௌஷ்கரம், (8) மிருகேந்திரம், (9) காமிகம், (10) சுவாயம்புவம் முதலியவை.

Colophon:

இந்தப் பாஷ்யம் முன்னம் ஆகமங்களினின்றும் திருவேற்காடு ஸ்ரீமுத்தையா முதலியார் இங்கிலீசு பாஷையாற் செய்தார்; அதைச் சைவ - கந்தப்ப முதலியார் மருமகன் அணக்கட்டாம்புத்தூர் நயனப்ப முதலியார் தமிழாற் செய்தார்.

கோபாலு.

(கு-பு.)—

இது, 'சித்தாந்த சைவர்களென்பவர்கள் யார்' என்பதையும், வைதிகர்களுக்கும் சைவர்களுக்குமுள்ள வித்தியாசம் முதலியவற்றையும் தெரிவிப்பது. இதனை முதலில் இங்கிலீஷ் பாஷையில் திருவேற்காடு - மூத்தையா முதலியார் என்பவர் இயற்றினரென்றும், பின்னே கந்தப்ப முதலியார் மருமகன் அணக்கட்டாப்புத்தூர் நயனப்ப முதலியார் என்பவர் தமிழில் மொழிபெயர்த்தனரென்றும் தெரிகிறது. இதில் இது முற்றும் உள்ளது.

R. No. 340.

Paper. 11 × 9½ inches. **Foll.** 72. Lines, 20 in a page. Tamil. Good.
Restored in 1916-17 from a MS. of the Library.

கிரஹஸ்புடம், உரையுடன்.
GRAHASPUṬAM WITH COMMENTARY.

Same work as that described under No. 31 (*d*) on page 267 of M. Seshagiri Śāstriyār's Report No. 1, being a copy made from the MS. described therein.

Complete.

(கு-பு.)—

இது சேஷகிரி சாஸ்திரியார் ரிபோர்ட் வால்யம் 1 நம்பர் 31 (d) பக்கம் 267-ல் வந்துள்ள பிரதியைப் பார்த்தெழுதப் பெற்றது. இந்தப் பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றும் உள்ளது.

R. No. 341.

Paper. 10¾ × 9½ inches. Foll. 39. Lines, 20 in a page. Tamil. Good.
Restored in 1917-18 from a MS. in the Library.

(*a*) திருக்கழுக்குன்ற அம்பிகை சந்நிதியின் சாசனம்.
TIRUKKALUKKUNṞA AMBIKAI SANNIDIYIN ŚĀSANAM.

Foll. 1*a*—2*a*.

A copy of the inscription found in the innermost compartment of the temple of Ambikai in Tirukkaḷukkunṟam. It is dated the 2nd of the Vaikāśi month of the 4th year in the reign of Sundarapāṇḍiyadēvar. It relates to the receipt of certain emoluments by the worshipping priest of Tirukkaḷukkunṟam from Adiyamāndēvar for conducting the the daily worship of Śiva in the shrine of Ponniṭṭīśvaramuḍaiyār in the said place.

Complete.

Beginning :

அம்மன் கோயில் [ெ]கர்ப்ப(க்) கிரகத்தில் சிலா சாசனம் [பூதது] (பிர தி.

சொஸ்தஸ்ரீ வி[ஜ]சய கோற்சடைப் பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் எம் மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்க்கு ஆண்டு நாலாவது வையாசிமீ 2உ திருக்கழுக்குன்றத்து உடையார் பொன்னிட்டீசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு ஆதிகண்டேசுவர தேவர் இவ்வூர் உடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலில் பூசிக்கும் சிவருத்திர

பண்[டு](டி)தரும், சிவமுத்தி பட்டரும், தருணேந்துசேகரபட்டரும், திருக கழுக்குன்றமுடையான் பட்டரும், சிவஞான பண்டிதரும், சந்திரபூஷண பட்டரும் இவ்வனைவரோம் ; உபையத்தீட்டுக் கொடுத்த பரிசாவது : —

End :

உடையார் பொன்னிட்டீசுவரமுடைய நாயனாரைப் பூவிக்கு (?) பூசை(ப்) பேற்றுக்கு நாங்கள் பொன்கொண்டுபோய் இசையூட்டுக்கு நாயனார்க்கு ராசக்கர நாயனாகமகன்களில் மாடக்குறகருழமரிது துரையிலகாமன் அரசனை அதியமான தேவர் பக்கல் நாங்கள் உபையங்கொண்ட இவ்வாண்டை வைகாசிமீ௳ உ௰உ-௳ முதல் சந்திராதித்தவரைக்கும் நாள் ஒன்றுக்கு அரிசி நாழி உரிக்கும் [வ] வாரி . . . ழி உரிக்கும் இவர் பக்கல் கொண்ட பணம் உஉ; இப்பணம் இருபத்திரண்டரையும் கைக்கொண்டு இவ்வரிசி நாழி உரியும் பூசைப்பெற்றுக் கைக்கொண்டு முன்னாள் முதல் சந்திராதித்த வரையும் பூசிக்கக் கடவோமாக ; சம்மதித்து ஒபையத்தீட்டுக் கொடுத்தோம்.

இவ்வனைவரோம்.

இ[வை](து) சிவருத்திரபண்டிதர்
இ[வை](து) திருக்கழுக்கு[ண](ன்ற)முடையான் பட்டாரும்
இப்படிக்கு இ[வை](து) தருணேந்து பட்டாரும்
இப்படிக்கு இது ஸ்ரீகாவேருபிவார[ஷ](ட்)சை. (?)

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றம் கோவில், அம்பிகை கர்ப்பக் கிரகத்திலுள்ள ஒரு சாசனத்தின் பிரதி. ஷை ஊர்க் குருக்கள்கள், பொன்னிட்டீசுவரமுடையார் கோயில் பூசைக்காக அதியமான் தேவரிடமிருந்து வாங்கிக்கொண்ட பணம் 22½ என்றும், அதற்கு ஒவ்வொரு நாளும் நாழியுரி அரிசிகொண்டு மேற்குறித்த சிவபெருமானுக்குப் பூசை செய்வதென்றும் செய்துகொண்ட ஏற்பாட்டைத் தெரிவிக்கிறது. இச்சாஸனம் எழுதிய காலம் சுந்தரபாண்டிய தேவர்க்கு நான்காவது ஆண்டு வைகாசிமீ௳ உ௲.

(*b*) திருக்கழுக்குன்ற சாசனம், TIRUKKAḺUKKUNṞAŚĀSANAM.

Foll. 2*a*—3*a*

A copy of the inscription in the wall to the west of the entrance gate of the cooking compartment in the temple of Vēdagirīśvarar in Tirukkaḻukkunṟam. It is dated Wednesday the 1st of the bright fortnight of the month of Aippisi in the year Vyaya, Śaka 1328 expired It relates to the grant of a certain village to God Vēdagirīśvarar by Bokkarāya Sundararāyar.

Beginning :

மடைப்[பி](பள்)ளி வாசப்படிக்கு மேலண்டை [செவி](சுவ)ரிலே எழுதியிருந்த சிலாசாசனப்பிரதி.

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர அரிராயவிபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் மூவராய கண்டன் ராசாதிராச ராசபரமேசுவர வீரப்பிரதாப பொக்கராயருக்குச் செல்லா[யி]நின்ற சகாப்தம் ௲ 1328-க்குமேல் விய வருஷத்தில் துலாநாயிற்றுப் பூருவபட்சத்துப் பிரதமையும் புதவாரமும் பெற்ற அசுவதிநாள் [ெ]சயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து தனியூர் திருக்கழுக்குன்றத் துடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனருக்குப் பொக்கராயன் சுந்தரராயர் அருளிச்செய்தபடிக்கு(க்) குடி நீங்கள் தேவதானமாகவிட்ட ஆமூர்க் கோட்டத்து ஆயிரவேலி பக்கத்தில் செனநாத நல்லூரான சிறுதையூருக்கு எல்லையாவது :—

கீழ்பாற்கெல்லை தாழம்பள்ளத்துக்கு மேற்கு, தென்பாற்கெல்லை தழுவக்[கொழு](குழை)ந்த நல்லூருக்கு வடக்கு மேல்பாற்கெல்லை மடையத்தூர் அச்சரபாக்கத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை கொண்டம்பாக்கத்துக்குத் தெற்கும் இந்நாயனூர் திருநாமத்துக் காணிகொண்டாளநாயகவிள . . . . ஸ்ரீபூதெரி ஆண்டார் பெருமாள் ஸ்தானமான்னிய நீங்கலாக நத்தம் நஞ்சை நிலம் புஞ்சை நிலம் கொல்லை [பி](பு)றவடை ஏரியும்

End:

ஏரி நீரோடுகாலும் மரமும் கிணறும் மன்றும் கன்று மேழும் உள்பட தர்மசாதனம் பண்ணிக்கொடுத்து இவ்வூரில் கடமை பொன்வரி, வாசல்வரி, மாவடை, மரவடை, ஏரிமீன் விலை, திருவாசலில் பிறக்கும் பழவரி புதுவரி சகலத்துவரிக்கும் திருக்கழுக்கு[ண](ன்ற)முடைய நாயனருக்கு பொக்கராயனதிக்கும் திருப்பணிக்கும் சருவமான்னியம் இறையிலியாகச் சந்திராதித்தவரைக்கும் செல்லும்படிக்குச் சிலாலேகை பண்(ணி)க்[கு](கொ)டுத்தேன்.

(கு பு.)—

இது திருக்கழுக்குன்றம் வேதகிரீசுரர்கோவில் மடைப்பள்ளி வாசற்படிக்கு மேலண்டைச்சுவரில் உள்ள ஒரு சாசனத்தின் பிரதி. வேதகிரீசுவரர்க்கு, பொக்கராயன் சுந்தரராயர் ஆமூர்(க்)கோட்டத்து ஆயிரவேலி பக்கத்தில் செனநாத நல்லூரான சிறுதையூரைத் தானம் செய்த விவரத்தை விளக்குகின்றது. இது வெட்டப்பட்ட காலம் சகாப்தம் 1328-க்கு மேல் செல்லாநின்ற விய ௵ ஐப்பசி௴ பூருவபட்சப் பிரதமையும் அசுவதி நட்சத்திரமுங் கூடிய புதவாரம்.

(c) திருக்கழுக்குன்ற சாசனம்.

TIRUKKALUKKUNṞAŚĀSANAM

Foll. 3*b* - 4*a*.

A copy of the inscription relating to the grant of a portion of the village of Śiṟuḍaiyūr for the performance of certain services on the occasion of the festival of Mahāpūsam to Tirumalai Āḷuḍaiyanāyanār,

a form of Śiva worshiped in Tirukkaḻukkunṟam. The inscription is dated Wednesday the fullmoon day of the month of Puraṭṭāśi in the year Vyaya, Śaka 1328 expired.

Beginning :

. . . . . வாசப்படிக்கு . . . .

ஸ்ரீமன் மகாமண்டலேசுவர பிரதாப பொக்கராயருக்குச் செல்லா[யி]நின்ற சகாப்தம் ௵ 1328-க்கு மேல் விய ௵த்தில் கன்னிநாயிற்றுப் பூர்வ பட்சத்து பவுர்ணமி புதவாரமும் பெற்ற அ(சுவதி) நாள் [ஜெ]சயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்(க்) கோட்டத்து ஆயிரவேலிப் பக்கத்தில் நாட்டவரோம் உடையார் திருமலை(யாளு)டைய நாயனார்க்குத் தர்ம சாசனம் பண்ணிக்கொடுத்தபடி :—

எங்கள் பற்று செனநாதநல்லூரான சிறுதையூர் நாற்பாற்கெல்லையும் தானமானியம் நீங்கலாக மகா பூசத்தினத் திருப்பணிக்கும் நாட்டு திறையிலியாக்கும் நீங்கா தேவதானமாக இந்த ஊரில் இரா . . . ரதாததுக்கு இருக்கும் பொன் 60 வினிவகமும் எங்கள் நாட்டிலே இறை ஒற்றிக்கொண்டு சந்திராதித்தவரைக்கு மிறுத்துக்(கொ)[கு]டுக்கும் . . . . கொடுத்தோம்.

உடையார் திருமலையாளுடைய நாயனருக்கு ஆயிரம் வேலிப்பற்று நாட்டவரோம்.

இப்படிக்கு

இ[வை](து)வீசமூர் கிழவன் எழுத்து.
,, (வை)த[ய்]யூர் கிழவன் எழுத்து.
,, மாப்பூதிமாலை ஆழ்வான் எழுத்து.
,, பொன்னம்பல(க்)கூத்தன் எழுத்து.
,, திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து.
,, நாட்டுக் கணக்குத் தொண்டை மண்டலவேளான்.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் திருமலை ஆளுடைய நாயனார் மகாபூசதினத் திருப்பணிக்கு ஆயிரம் வேலிப்பற்று நாட்டவர் சிறுதையூரில் தானசாசனஞ் செய்து மிகுந்திருந்த பாகத்தைக் கொடுத்த விவரத்தைத் தெரிவிப்பது. இச் சாசனத்தின் காலம் சகாப்தம் 1328-க்குச் செல்லாநின்ற விய ௵ புரட்டாசி௴ பூர்வபட்சம் பௌர்ணமி திதியும் அசுவதி நட்சத்திரமுங் கூடிய புதவாரம்.

(*d*) திரிபுரசுந்தரிகோயில்சாசனம்.

TRIPURASUNDARIKŌYILŚĀSANAM.

Foll. 4*a*-5*a*.

A copy of the inscription in stone in the temple of Goddess Tripurasundarī in Tirukkaḻukkunṟam relating to the grant of a lamp, cows, etc.,

to the temple of Ponniṭṭīśvaramuḍaiya Nāyanar in the said place by Adiyamāndēvar. It is dated Sunday the 9th day of the dark fortnight when the moon was in the constellation Rēvati of the month of Mithuna in the reign of Sundarapāṇḍiyadēvar.

Beginning:

ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்(ை)ம[ன்] அவர்கள் கோயில் . . . . சிலாசாசனத்துக்கு நக்கல்.

ஸ்ரீகோற்சடை பன்மரான எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ஷூல் மிதுனநாயிற்று அமரபட்சத்து நவமியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற ரேவதி நாளும் கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர் கோட்டத்துத் திருக்கழுக்குன்றத்து உடையார் பொன்னிட்டீசு(வ)ரமுடைய நாயனார் கோயிற்றானத்தார்க்கு உடையார் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் கோயிலில் திருநுந்தாவிளக்கு(க் குட்டி) மன்றாடியடைப்புத் திருக்கழுக்குன்றம் கோனும், அரசுபுரந்த . . கோனும் சித்திரமேழிக்கோனும் பெரியநாட்டுக்கோனும் இந்த நால்வரோம் மெய்ப்பூட்டு தீட்டுக்கொடுத்த பரிசாவது :—

End:

உடையார் பொன்னிட்டீசுரர் கோயிலுக்குப் பாண்டியமண்டலத்து படக்குளக்கிடி மதுரையலகாமன் அரசரான [பு](அ)தியமான தேவர் சந்திராதித்த வரையும் செல்வதற்குத் திருநுந்தா விளக்கு ஒன்றுக்கு வட்ட சலாமும் வானீற்பசு முப்பதும் ரிஷபம் ஒன்றும் கைக்கொண்டு நாள் ஒன்றுக்கு நாழிச் சேரால் அளக்க . . . . நெய் [ஓ](உ)ழக்கால் (ை)வத்த நெய் சந்திராதித்தவரையும் நாங்கள், பரம்பர புத்திரரும் அளக்கக்கடவோமானோம்.

(கு. பு.)—

இது திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரி கோவிலிலுள்ள ஒரு சாசனத்தின் நகல். பொன்னிட்டீசுவரமுடைய நாயனாருக்கு நுந்தாத நெய் விளக்கும், பசு முப்பதும் பாண்டியமண்டலத்து மடக்குளக்கீழ் மதுரை யலகாமன் அரசரான அதியமான்தேவர் கொடுத்த விவரத்தைக் கூறுகின்றது. இதன் காலம், சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு . . . ஷூல் மிதுனநாயிற்று அமரபக்ஷத்து நவமியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற ரேவதி நாள்.

(e) பக்தவற்சலேசுவரர்கோயில் சாசனம்.

BAKTAVARCALĒSUVARARKŌYIL ŚĀSANAM.

Foll. 5*a*—6*a*.

A copy of the inscription on stone in the wall to the south of the entrance door in the temple of Bhaktavatsalēśvarar in Tirukkalukkunram relating to a sale-deed executed by two persons to one Anjūr Sundarayya. Date of inscription—Friday the, 12th of the dark fortnight in the month of Cittirai of the year Vibhava in the reign of Karuppaṇa Uḍaiyān.

Beginning :

பக்[த]தவர்த்தவீசுர சுவாமியா வாச(ற்)படி தெற்கு சுவரில் இருந்த சிலாசாசனத்துக்கு நகல்.

சொஸ்த ஸ்ரீமன் மகா மண்டலேசுர மூவராய கண்டன் ஸ்ரீவீர அரியண உடையார்[க்]குமார(ர்)[வ](க)ருப்பண உ(டை)டயார்க்குச் செல்லாநின்ற விபவஹூ த்து மேஷ நாயிற்று அமரபட்சத்து துவாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற அனுடத்து (நாள்) செயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர் கோட்டத்துச் செங்குன்ற நாட்டு அஞ்சூரில் சடையப்பரையா பேரனுர் உண்டான சுந்தரய்யா மகனுக தொண்டர்க்குந் தாயற்று யிம்மண்டலத்து ஆமூர் கோட்டத்துக் குமிழி நாட்டுத் தையூரான தெசநல்லூர் கிழவன் ஆதித்த தவர் முருகாழ்வாரை . . . . பரிசாவது :—

End :

தையூர் கால்வா, கூ-ம் கடலூரில் என் காணியான நா-ருக-வேலியும் இதில் மேல்வரும் கொல்லே [பி](பு)றவடை பொது அஞ்சு அளம் மனையும் மரமும், [குன](கிண)றும், வெள்ளான் பிள்ளைகளில் மாணிக்க[ந்](ன்) பெரிய காய(ன்)ந்திவடையான் இம்மூவரும் பறைய[டு](டி)மைக்காறப் பெருமாள் உள்ளிட்டார் என் காணியான எல்லே முற்றும் விலே நிச்சயித்த பணம் கருளாசுய, இப்பணம் ஆயிரத்[து அன்னூத்து அற](தைந்நூற்றறு)பதும் இது விலேயாவதாகவும்; இதற்கு எப்பேர்ப்பட்ட கலனும் உத்தரவாதம் பண்ணுகிறேன். என்று எழுதியிருக்கப்பட்ட சா[தக](சன)ம்.

இப்படி,
ஆதித்ததேவன் எழுத்து.
முருகாழ்வார் எழுத்து.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றம் பக்தவற்சலேசுவரர் கோவில்வாசற்படிக்குத் தெற்குச்சுவரில்உள்ள சாசனம் ஒன்றின்நகல். அஞ்சூர் சுந்தரையா என்பவருக்குத் தையூராதித்த தேவர் முருகாழ்வார் என்பவர்கள் எழுதிக்கொடுத்த நிலமுதலியவற்றின் கிரயசாசனத்தை தெரிவிக்கிறது.

இந்த நிலமுதலியனவற்றின் கிரயமாக, தையூராதித்த தேவர் என்பவர் அஞ்சூர் சுந்தரையாவினிடம் பெற்றுக்கொண்ட பணம் 1560. இஃதெழுந்த காலம் கருப்பண உடையார்க்குச் சொல்லாநின்ற விபவஹூ சித்திரைமீ அமரபக்ஷத்துத் துவாதசியும், அனுஷ நட்சத்திரமுங்கூடிய வெள்ளிக்கிழமை.

(*f*) பக்தவற்சலசுவாமிகோயில்சாசனம்.

BHAKTAVAṚCALASVĀMIKOYILŚĀSANAM.

Foll. 6*a*—7*a*.

A copy of the inscription found in stone on a wall to the south of the deity at the gate of the temple of Bhaktavatsalasvāmi in Tirukkaḻukkunṟam. It relates to an agreement made between certain weavers of Tirukkaḻukkunṟam. It is dated the 1st of Puraṭṭāsi of the Ānanda year in the time of Vīragoppaṇa Uḍaiyār.

Beginning :

பக்தவச்சலசுவாமியார் வாச[ப்](ற்)படிக்கு(த்) துவாரபாலகருக்கு(த்) தெற்கு[செவி](ச்சுவ)ரிலே இருந்த சிலாசாசனப்பிரதி.

சொஸ்தஸ்ரீ வீரகொப்பண உடையார்க்குச் செல்லாநின்ற ஆனந்தவருஷத்துப் புரட்டாசி மீ முதல் தேதி திருக்கழுக்குன்றம் நான்கெல்லைக்குட்பட்ட கைக்கோளர் பொற்பட்டாடை நூலாயும் ஆட்டை . . ச . . ம் மாதம்பொசசம் மாதவட்ட அதிகமாதம் (?) மற்றும் எப்பேர்ப்பட்ட பலவுபாதியும் உட்படவும் இவ்வூர்கைக்கோளர் பட்டணத்துக்குக் கொண்டுபோம் [பி](பு)டவைக்கும் இவர்கள் பட்டணத்திலிருந்து கொண்டுவரும் பலசரக்குக்கும், பலபற்றில்கொண்ட நெல்லுக்கும் (. . . . .) கூட்டுக் குத்தகையாக நிச்சயித்த பணம்-எம.

End:

இந்தப்பணம் எழுபதும் ஒழிய வேறொன்று சொல்லக்கடவனல்லதாகவும்; இம்மரியாதி சந்திராதித்தவரையும் நீர் பற்றிக்கொள்ளவும்; இத்தற்மத்துக்கு அழிவுசொன்னவன் [ெ]கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்றவன் பாவங்கொள்வன்.

அருளிச்செய்தபடிக்கு,

இ[வை](து)நாகுழகன் எழுத்து.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றத்து பக்தவற்சலசுவாமி கோவில்வாசற்படி துவாரபாலகருக்குத் தெற்குச்சுவரிலுள்ள சாசனம் ஒன்றின்பிரதி. ஷை ஊரில் கைக்கோளர்கள் புடவை, பலசரக்குமுதலிய தம் வியாபாரநிமித்தம் செய்துகொண்ட கூட்டுக்குத்தகையின் விவரத்தைத் தெரிவிக்கிறது. இதன்காலம் ஸ்ரீ வீரகொப்பண உடையார்க்குச் செல்லாநின்ற ஆனந்த[வரு] புரட்டாசிமீ கஉ.

(g) திருக்கழுக்குன்றம் கோயிலுக்குக் கிரயசாசனக்கிராம நாமாவலி.

TIRUKKAḺUKKUNṞAM KOYILUKKUK KIRAYAŚĀSANAKKIRĀMA NĀMĀVALI.

Foll. 7*a*—7*b*.

Purports to give a list of the villages given by different persons to the temple of Tirukkaḻukkunṟam.

Beginning :

இதயூர்.	முருகாழ்வார்.	கடலூர்.
தேசநல்லூர்கிழவன்.	தையூர்.	ஆகக்கிராமம்
ஆதித்ததேவர்.	காலவாக்கம்.	மூன்றிலும்

அவன் காணியான ௫ஙட-வேலியும் கடுளடுபணத்துக்கு விபவ-ஸ்த்தில் குறையும் பணமும்கொடுத்து . . . . நாளையில் . . . . . பா-கூ-ம், தாழம்பா-கூ. ஆகக்குழும உ-க்குக் குறைய சாதனம்.

End:

தானம்பண்ணும் கருதகிராமம் (?)

வழுதூர் நடுவக்கரை சிறுதாலூர்.

பொக்கராயர் சந்திக்கராயர் அருளிச்செய்தபடிக்கு 1328-க்கு விய ஸூடத்தில் தானம் கொடுத்தது.

குலோத்துங்கசோழநல்லூரில் திரிபுவனசக்கரவர்த்தி[ய](க)ள் விட்ட நிலம் ௩உ-வேலி.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் கோயிலுக்குச் சிலரால் கொடுக்கப்பட்ட கிராமம், நிலம் முதலியவற்றின் விவரத்தைக் கூறுவது. காலம் தெரியவில்லை.

(*h*) திருக்கழுக்குன்றம் குருக்கள்மார்வரலாறு.

TIRUKKAḺUKKUNṞAM GURUKKAḶMĀRVARALĀṞU.

Foll. 7*b*—12*b*.

Gives a short history of the worshipping priests in Tirukkaḻukkunṟam describing the emoluments received by them at different times for conducting the worship of God Śiva in that temple. Also incidentally narrates the structural constructions as well as repairs made in the Tirukkaḻukkunṟam temple by Pērambalapaṇḍāram and Cidambarapaṇḍāram.

Date of this statement: 4th day of Āvaṇi in the year Śukla.

Beginning:

திருக்கழுக்குன்றம் குருக்கள்மார் வரலாறு.

வடக்கே மந்தரகாளிபுரத்திலே யிருக்கச்சே ராசேந்திரசோழராசாதனக்குப் பிரமஹத்திதோஷம் போதற்காகக் கங்காஸ்தானத்துக்குப் போகச்சே ராச்சியங்களிலிருக்கப்பட்ட ஸ்தலங்கடோறும் கோயிலுக்குள்ளே சுவாமி தரிசனம் பண்ணப்போகச்சே ராசா சோழன்பேரிலே இருக்கிற பிரமகத்தி கோபுரவாசலிலே நின்றிருந்து தரிசனம் பண்ணிக்கொண்டுவரச்சே (. . . . .) மந்தரகாளிபுரத்துக்குப் போகச்சே ஊருக்கு வெளியிலேதானே பிரமகத்தி நின்றிருந்தது (. . . . .) ராசா திரும்பவும் மந்தரகாளிபுரத்துக்குவந்து அந்த ஊரில் இருந்த ஆதிசைவர்கள் நல்ல யோக்கியதை உடையவர்கள் மந்தரசாமர்த்தியம் உள்ளவர்கள் என்று ராசா மனசுக்குத்தோன்றி எங்கள் நான்கு கோத்திரிகாளைக்கூட அழைத்துக்கொண்டு, தன்னுடைய தேசத்தில் இருக்கப்பட்ட திருக்கழுக்குன்றத்தலத்திலே இருக்கும்படிவைச்சு சுவாமியாருக்குப் பூசைபண்ணும்படியாய் எங்களைத் தாபித்து அதுக்காக எங்களுக்கு இந்தக்கிராமத்தைப் பிரம்மதேயமாய்க் கொடுத்து (. . . . .) சுவாமி பிரசாதமும், கிராம சர்வமான்னியமும்

அனுபவித்துக்கொண்டுவந்தோம்; அதன் பிற்காலங்களில் கிருஷ்ணராயர் ராச்சியபாரம் பண்ணச்சே இந்த ஸ்தலத்தில் சுவாமியார் குங்கிலிய பண்டாரத்தை ஆளக்கொண்டு அந்த(ப்) பண்டாரம் வந்து [சிறுது](சில)நாள் கோயில்தர்மம் விசாரிச்சுக்கொண்டிருந்தார்.

End:

அதன்பிறகு சாத்துல்கான்சுபாவில் நம்பறை வேங்கடராமய்யர் இந்தச் சீமைக்கு அமல் வாங்கிக்கொண்டுவந்தார். அவர் இந்தக் கோயிலைப்பார்த்துக் கோபுரவாசலில் சுவர் வைத்திருக்கிறதைத் தள்ளிப்போட்டு (. . . .) இந்த ஊரிலே கொஞ்சம் மானியமும் இந்த மாகாணக்கிராமங்களில் மேரையும் கொடுத்துப் பூசைநிவேதனம் உற்சவம் (முதலியவற்றை) வெகு உத்தாரமாய் நடப்பிச்சார். (. . . .) பிறகும் முதலிகான்சுபாபுல் அப்பாச்சிநயினர் இந்தச்சீமைகுத்தகையாய் அமல் வாங்கிக்கொண்டு வந்தார். (. . . . . .) செங்கல்பட்டு சீமைக்குக் கலத்துக்கு நாழி மேரையும், அறுபத்தாறு காணிமானியமும், முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாச்சிமேடு, மாதளங்குப்பம் ஆக நாலு கிராமம் சுரோத்திரியமும் சிலவு வாங்கிக்கொடுத்து அதுமுதலாய்ப் பூசைநிவேதனமும் மகோற்சவமும் நடந்தது. அந்தபடிக்கு இப்போ(து) கும்பினியார் அவர்களும் நடப்பிச்சுக்கொண்டுவருகிறார்கள். இதிலே மாதளங்குப்பம் சுரோத்திரியகிராமம் மாத்திரம் ஐதர்க்கலாபனை கழிச்சபிறகு பராபவவருஷம் முதல் கட்டுப்பட்டிருக்கிறது. (. . . . . .) இந்தப்படிக்கு நாங்கள் பூசைபண்ணிக்கொண்டு சுவாமி பிரசாதமும் வாங்கிக்கொண்டு கிராமத்தில் பயிர்செய்துகொண்டு இந்தத்தலத்தில் காத்திருக்கிறோம்.

Colophon:

இந்தப்படிக்கு நாங்கள் கேள்வியானதும் அறிஞ்சதும் எழுதிவைச்ச வரலாறு.

சுக்கில௵ ஆவணிமீ 4௳.

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் குருக்கள்மாருடைய வரலாற்றையும், அவ்வூர்க் கோவில் வரலாற்றையும் தெரிவிப்பது; ராசேந்திர சோழனென்னும் அரசன் மந்தரகாளிபுரத்திலிருந்து குருக்கள்களை அழைத்துவந்து திருக்கழுக்குன்றத்தைப் பிரமதேயமாகக் கொடுத்தமையும் கிருஷ்ணராயரால் பேரம்பலபண்டாரம் 50 கிராமங்களைப் பெற்று வேதகிரீசுவரருடைய பழைய கோபுரத்தைப்பிரித்துப்புதிதாக 5-கோபுரங்கள் கட்டி, வேறு சில திருப்பணிகளும் செய்தமையும், சிதம்பரபண்டாரமென்பவர் மண்டபத்திருப்பணி முதலியவற்றைச் செய்தமையும், (இரண்டாம்) சிதம்பரபண்டாரத்தின் காலத்தில் துருக்கர்கள் ஷை கோயில் விஷயத்திற்செய்த அகிருத்யங்களும், சித்தப்பராயர் சங்கரராய'ரென்பவர்கள், திருக்கழுக்குன்றமுடையாருக்கு மேரையும், மானியமும் விட்டு பூசை, உற்சவம் நடத்தினமையும், அதன்பின் நமச்சிவாய பண்டாரத்தின் காலத்தில் துருக்கர்கள் சந்நிதிக்குச்செய்துவந்த கேடுகளும், வேங்கடராமய்யரால் அவைகள் நிவர்த்தியாய்ப் பழையபடி பூசை நைவேத்திய முதலியன நடந்துவந்தமையும், அப்பாச்சிநயினர், செங்கல்பட்டு சீமைகலத்துக்கு நாழி மேரையும், 66 காணிமானியமும், முத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நா(ய்)ச்சிமேடு, மாதளங்குப்பம் முதலிய நான்கு கிரா

மங்களைச் சுரோத்திரியமாக, திருக்கழுக்குன்றமுடையார்க்கு விட்டு உற்சவம் முதலியன வெகு விமரிசையாக நடக்கும்படி செய்தமையும் ஆகிய இவைகள் விரிவாக இதிற் கூறப்பெற்றுள்ளன. எழுதியது, சுக்கில௵ ஆவணி௴ 4௳ என்றுமட்டும் இருத்தலின் காலம் விளங்கவில்லை.

(i) பழைய அரசர்களாண்டவருஷங்கள்.
PAḺAIYA ARAŚARKAḶĀṆḌAVARUṢAṄGAḶ.

Foll. 13*a*--15*b*.

Purports to give the names of the ancient kings who ruled over India together with the time of their sovereignty.

Beginning:

நந்தன நாம சம்வத்சர . . . . . சிய (?) பெலிபந்தனுதி புருஷகெத காலப்பிரம(ா)ணுதி எழுதுகிறது.

பெலிபந்தனுதி ராசா ராச்சியம் ௵ ௧௧ கோடியும் ௩௰௮ லட்சம் ௮௲௮௱௫௰௩.

அரிச்சந்திர மகாராச ௵ ௧௪ கோடியும் ௨௯ லட்சம் ௩௯௲௯௱௪.
நளமகாராச ௵ ௧௩ கோடியும் ௩௭ லட்சம் ௨௰௲௫௱௩௪.
புருகுச்ச[ன்]ராசா ௵ ௧௨ கோடியும் ௩௮ லடசம் ௪௪௲௫௬௫.
புரூரவ மகாராசா ௵ ௧௧ கோடியும் ௨௬ லட்சம் ௬௪௲௬௱௭௰.
சகர[ன்] ராசா ௵ ௧௧ கோடியும் ௨௫ லட்சம் ௩௮௲௫௱௪௰.
கார்த்திவீரியராசா ௵ ௧௦ கோடியும் ௨௰௪ லட்சம் ௩௪௲௯௱௰௯.
அங்கராசா ௵ ௯ கோடியும் ௧௯ லட்சம் ௩௮௲௮௱௫.

(* * * *)

பாண்டவர்(க)ள் ௵ ௪௲௮௱௫௬.
பரிட்சித்து மகாராசா ௵ ௪௲௮௱௩௰.
செனமேசெய[ன்] ராசா ௵ ௪௲௫௱௨௰.
உதய மகாராசா ௵ ௪௲௬௱௮௰௮.
விசயதேவ ராசா ௵ ௪௲௬௱௭௰௬.
செயதேவ ராசா ௵ ௨௲௪௱௩௰௩.
சாலிவாகன ராசா ௵ ௲௬௱௯௰.
சதுர்முக ராசா ௵ ௩௲௫௱௰௨.
கண்ணுவமனு ராசா ௵ ௩௲௫௱௬௰௫.
மகிபால ராசா ௵ ௩௲௬௰௬.

End:

திர்மாணதேவராயர் ௵ ௨௲௱௪௰௫.
மகாபலதேவராயர் ௵ ௨௲௬௱௨௰௮.
ஸ்ரீநாதராயர் ௵ ௨௲௫௱௯௰௮.
மல்லிநாதராயர் ௵ ௨௲௨௱௭௰௫.
சந்திர[பு](கு)த்த[ன்] மகாராயர் ௵ ௲௩௱௩௰௭.
போச ராசா ௵ ௲௭௱௯௰௧.

(* * * *)

ராசராச சோளன் ஷூ ௲௩௱௰௯.
வல்லாளராய ராசா ஷூ ௲௪௰.
சின்னவல்லாள ராசா ஷூ ௲௬௰௯.

(* * * *)

பிரதாபருத்திர ராசா ஷூ ௲௬௰௧.
மல்லீசுர ராசா ஷூ ௲௫௰௨.
அனவென ராசா (?) ஷூ ௲௨௰௭
திருமலராய ராசா ஷூ ௲௨௰௨.
கெசபதிகபிலேசுவர ராசா ஷூ ௲௰௭.
வீரநரசிம்ம ராசா ஷூ ௨௲௧௰௯.
கி(ரு)ஷ்ணராயர் ஷூ ௨௲௭௰௭.
அச்சுதராயர் ஷூ ௨௲௪௰௮.
ராமராயர் ஷூ ௨௲௰௭.
திருமலைராயர் ஷூ ௨௲௨.
ஸ்ரீரங்கராயர் ஷூ ௨௲௮௰௫.
வேங்கடபதிராயர் ஷூ ௨௲௫௰௯.
சிறக்கராயர் (?) ஷூ ௨௲௫௰௫.
ராமச்சந்திரராயர் ஷூ ௨௲௪௰௯.
ஸ்ரீரங்கராயர் ஷூ ௨௲௨௰௮.

இப்படிப்பட்ட தர்[ம்]ம ராசாக்கள் ராச்சியபாரம் பண்[ணு](ணிணு)ர்கள்.

(கு-பு.)—

இது, பூர்வீக அரசர்கள் ஆண்டகாலம், இஃதெழுதப்பட்ட காலத்துக்கு இத்தனைவருஷங்களுக்கு முன் என்பதைத் தெரிவிப்பதாகுமென்று தோற்றுகிறது. இதை எழுதிவைத்தவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(*j*) திருக்கழுக்குன்றங்கோயில்நித்தியகட்டளை திட்டம்.

TIRUKKAḺUKKUNṞAṄKŌYIL NITTIYAKAṬṬAḶAI DIṬṬAM.

Foll. 15*b*—16*b*.

Gives a list of the articles daily used in the Vēdagirīśvarar temple at Tirukkaḻukkunṟam, such as rice, dholl, ghee, oil, etc., together with the quantity of each of the items so expended.

Beginning:

திருக்கழுக்குன்றங்கோயில் பிலவங்க ஷூ நாள் க-க்கு நித்திய கட்டளை திட்டம்.

பாறுகாலால் அரிசி தூ எஉ புயசுஉ.
பருப்பு சேர் உ-க்கு பு-உ.
நெய் பலம் யஉவ-க்கு பு-உவது.
நல்லெ(ண்ணெய்) சேர் யக ஞு-க்கு பு யஉஞ.
சக்கரை பலம் யகூ-க்கு பு-காது.
தேன் பலம் ச-க்கு பு-9.
மஞ்சள் பலம் ௩க்கு பு-வது.

End:

மிளகு பலம் ஞ-க்கு பு-நூஉ.
மாசேர் ஞக்கு பு-ஞு.
சந்தனக்கட்டை பலம் ரு-க்கு பு-ஞ.
ஆக பு-சகவ.

(கு-பு.)—

இது திருக்கழுக்குன்றம் வேதகிரீச்வரர் கோயிலுக்குத் தினப்படி செலவாகிவந்த சாமான்களின் திட்ட விவரமுதலியவற்றை விளக்குவது. இதன் பின் ஷை கோயில் ஸம்பந்தமாக மற்றும் சிலவிஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. காலம் விளங்கவில்லை.

(k) திருக்கழுக்குன்றமுடையாருக்குரியதோட்டங்கள்.

TIRUKKALUKKUNRAMUDAIYARUKKURIYA TOTTANGAL.

Foll. 16b—17b.

Gives a list of the gardens belonging to the temple in Tirukkalukkunram with indications of the nature of the produce of those gardens.

Beginning:

தோட்டம்.

கிழக்குப் பூந்தோட்டத்தில் பழசு தென்னமரம்.
வேங்கடாசல நாயனார் தோட்டத்தில் பழசு தென்னமரம்.
சங்கு தீர்த்தக்கரை தென்னமரம்.
தேருவீதி பழசு தென்னமரம்.
வடக்குச்சாலை தென்னமரம்.
சின்னபாட்டை தென்னமரம் புளியமரம்.
ஏரி கீழ்த்தோட்டம் கிச்சிலிமரம் பலாமரம் வகைரா.
தெற்கு இலுப்பைத் தோப்பு ... ... க
புளியந் தோப்பு ... ... க
பிரதட்சிண வழியில் சாலை உள்பட இலுப்பைத் தோப்பு... உ
கிழக்கு இலுப்பைத் தோப்பு ... ... க

End:

மாததெரி வா(ை)ழத் தோட்டம் ... ... க
கிழக்குப் பூந்தோட்டம் ... ... க
கிணறு பூந்தோட்டம் ... ... க
வெங்கடாசல நாயனார் பூந்தோட்டம் ... ... க

ஆகத் தோட்டம் ச-ம் கம்பத்த உடவாரத்தில் வரும்படி குடிவாரமும் கோயிலைச் சேருகிறது.

(கு-பு.)—

இது, ஸ்ரீதிருக்கழுக்குன்றமுடைய நாயனாருக்குச் சொந்தமான தோட்டங்களின் விவரத்தையும், தோப்புக்களின் விவரத்தையும் விளக்குவது. இதைத் தொகுத்தெழுதியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(l) வேதகிரீசுவரர் ஈஸ்துவை (?)

VEDAGIRISVARARISTUVAI (?)

Foll. 17b—18a.

Gives some details in connection with the lease of three village belonging to Tirukkalukkunram temple.

Beginning :

திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவரசுவாமியாருக்கு நடக்கிற யிஸ்துவை.

சுரோத்திரிய கிராமம் :—மூத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாச்சிமேடு. ஆகக் கிராமம் ௩-ம் அந்தந்த குடிகள் இசாராப்பண்ணிக் கொண்டு க(லெ)லக்[கட்]டர் கச்சேரிக்குப் பணம் கட்டுகிறார்கள்.

End :

செங்கல்பட்டு சீமை மாமூல்தெசாடாடடிக்குக் கிராமங்களுக்கு வாரப் பற்றுப்போக நின்ற உடவாரத்துக்கு (கலம்)ருஹமீ௨ கிராமங்களில் மிகுதியும் அ(. . .)-உட்பட நஹு ௵ சகஹக்கு வரும்படி மேல் (. . .) ஆக மேரை மிகுதியும் வரும்படி மிட்டாதாரரைச் சேர்ந்து அ௳ருக்குப் பணம் செலுத்துகிறார்கள். க(டை)டய(ம்) பாக்கம், கோட்டைக்காடு ஆகிய இரண்டில் தென்னந் தோப்பு (காணி)ரு-க்கு அந்த [ஊர்] கிராமத்தார் மாரிபத்தில் சேருது.

(கு-பு.)—

இதில் மூத்திக்கு நல்லான்குப்பம், ருத்திரகோடி, நாய்ச்சிமேடு ஆகிய மூன்று சுரோத்திரிய கிராமங்களிலுள்ளவர்கள் தாங்கள் செலுத்தவேண்டிய வரியை எப்படிச் செலுத்திவந்தார்கள் என்ற விவரம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

(*m*) திருக்கழுக்குன்றம்கோயில்நுந்தாவிளக்கின்விவரம்.

TIRUKKAḺUKKUNṞAMKŌYIL NUNDĀVIḶAKKIN VIVARAM.

Foll. 18*a*—18*b*.

Gives a list of the lamps lighted in the temple at Tirukkaḻukkunṟam together with the names of certain persons who arranged to maintain that charity.

Beginning :

திருக்கழுக்குன்றம் கோயில் [ஔ](உ)பய விளக்கு வயணம்.

வேங்கடராமையர் மாரிபத்து ஒரு பல விளக்கு	...	௪௦
சுப்பராய பண்டாரம் மாரிபத்து ஒரு பலம் விளக்கு	...	௫௨
5 பல விளக்கு	... ...	க
4 ,,	... ...	உ

End :

3 பல விளக்கு	... ...	க
2 ,,	... ...	உ
½ ,,	... ...	௬
1½ ,,	... ...	க
ஆகச் சுப்பராய பண்டாரம் மாரிபத்து விளக்கு	... ...	௬௩
ஆக விளக்கு ...		௱௩

(கு-பு.)—

இது, திருக்கழுக்குன்றம் கோயில் விளக்குத் தர்மத்தைத் தெரிவிப்பது.

(n) பேரம்பல பண்டாரத்தின் வரலாறு.

PĒRAMBALA PAṆḌĀRATTIN VARALĀṞU.

Foll. 18b—19a.

Herein it is stated that Pērambalapaṇḍāram made some construction and arranged for the expenses of daily worship, etc., in the Tirukkaḻukkunṟam temple out of the income derived from certain lands obtained as Sarvamānyam from Kṛṣṇadēvarāyar. The names of the six Paṇḍārams who succeeded Pērambalapaṇḍāram and continued the charities after him are given. The details of the facts given here are said to have been written during the time of the seventh Paṇḍāram whose name is not given.

Beginning :

திருக்கழுக்குன்றம் பேரம்பல பண்டாரம் வரலாறு.

சங்குமுக ... ... மா(?)
கோயில் ... ... க
பொன்னிட்ட நாதர் கோயில் ... ... க
ருத்திரகோடி கிராமத்தில் ருத்திரகோடீசுவரர் கோயில் க

ஆலயம் பிராகாரம் கோபுரமும் கட்டிச் சிவப்பிரதிஷ்டை பண்ணினார். இந்தத்தர்ம கைங்கரியத்துக்குக் கிருஷ்ணராயர் அண்டை காத்திருந்து,
கட்டளைக்குக் கிராமம் ... ... நஉ
திருப்பணி வேலைக்குக் கிராமம் ... ... கஅ
ஆகக் கிராமம் ருய-ம் சருவமானியமாக வாங்கிக் கோயிலுக்குச் ச(ம்)பத்[தமு](து)ம் வைத்து கைங்கரியம் நடப்பித்தார்.

End :

அது முதல்கொண்டு இரண்டாம்பட்டம் சிதம்பர பண்டாரம்.
3-ஆம் பட்டம் பேரம்பல பண்டாரம்.
4-ஆம் ,, சிதம்பர பண்டாரம்.
5-ஆம் ,, நமச்சிவாயபண்டாரம்.
6-ஆம் ,, வைத்தியநாத பண்டாரம்.

7-ஆம் பட்டம் எனக்கு மன்மதவருஷ அஞ்சு வயசில் பட்டம் ஆச்சுது. இந்தப்படிக்கு (நாளது) வரைக்கும் தர்ம கைங்கரியம் நடந்தது. இப்புறம் 4-ஆம் பட்டத்தி(லிருந்து) அபிஷேக கட்டளை மாத்திரம் விசாரிச்சுக்கொண்டு வருகிறது.

(த-பு.)—

இது திருக்கழுக்குன்றத்தில், பேரம்பல பண்டாரம் என்ற ஒருவர், கிருஷ்ண தேவராயரிடமிருந்து 50 கிராமங்களைச் சருவமானியமாகப்பெற்று, அவற்றின் வரும்படியைக்கொண்டு கோயிற்றிருப்பணி செய்து, கட்டளை வைத்துத் தரும கைங்கர்யம் நடத்திவந்த விவரத்தையும், அவருக்குப் பின் அவர் பரம்பரையினராய் ஷை கைங்கரியத்தை நடத்திவந்த ஆறு பண்டாரங்களுடைய பெயர்களையுந் தெரிவிக்கிறது. ஷை பரம்பரை 7-வது பண்டாரரால் இஃது எழுதப்பட்டதாகத் தெரிகிறது. அவர் பெயர் தெரியவில்லை.

(o) பேரம்பலபண்டாரத்தின் வரலாறு.
PĒRAMBALAPAṆḌĀRATTIN VARALĀṞU.

Foll. 19*b*—20*b*.

Gives the life history of Pērambalapaṇḍāram with a detailed account of the nature of the temple structures constructed by him in Tirukkaulkunram.

Beginning:

திருக்கழுக்குன்றம் பேரம்பல பண்டாரம் வரலாறு.

ராயர் நாள் ௵ ௲ க்கு மேல் பிரபவ௵ தெற்கே தண்டலச்சேரியிலே சமுசார கிருகத்திலே சோழிய வே[ள]ளாளரில் பேரம்பல பிள்ளை என்கிறவர் இருபது வயதிலே இருந்தார். அவருக்கு ஸ்ரீவேதகிரீசுவரசுவாமிகள் சொப்பனம் சாதித்த வயணம் :—

This work is one of the so called Paṇḍāra Śāstirams. It explains the means of obtaining salvation according to the Śaiva Siddhānta. By Ambalavāṇatambirān of Tiruvāvaḍuturai Mutt.

Complete.

Beginning :

கற்றுடலற் றேயுயிரைக் கண்டருள்கண் டேயரனைப்
பெற்றணைமெய் யம்பலவாணன்பெருமை—யுற்றநாய்
பண்டா வடுதுறைச்சீர்பண னுபாயநிட்டை
வெண்பா வுரையே விரும்பு. (க)

தொந்தித்த காயந் தொலைவதற்கு முன்னுயிரைச்
சிந்தித்தார்க் கன்றே கிடமாகுஞ்—சந்தித்த
தோலோ வெலும்போ தொகுத்ததசை தானோவென்
றாலோசித் தார்க்கறிவே யாம். (உ)

End :

சீவிக்குங் காயஞ் சிவனலவே யென்னுமலப்
பாவிகட்கிந் நூலைப் பகரற்க—மேவு
முயிரே செயலற் றொடுங்கும்போ தீசன்
செயலேயென் பார்க்குரைக்கச் செய். (சகூ)

Colophon :

உபாயநிட்டை வெண்பா வுரைத்தானற் பத்தா
றுபாயநிட்டை வாராம லார்க்கு—முபாயநிட்டை
வெண்பாவாவடுதண்டுறைமையெஃகினார்க்கு
நண்பாகு மம்பலவாணன்.

உபாயநிட்டை வெண்பா முற்றிற்று.

(த-பு.)—

இது பண்டார சாத்திரங்களுள் ஒன்று. சித்தாந்த சைவசாத்திரக் கருத்துக்கள் பல எளிதில் அறிந்துகொள்ளும்படி இதில் விளக்கப்பட்டிருக்

கின்றன. இவ்வரியநூலைச் செய்தவர் திருவாவடுதுறை மடாதிபதியாகிய அம்பலவாணத் தம்பிரான். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

(c) பதிபசுபாசப்பனுவல்.
PATIPAŚUPĀŚAPPANUVAL.

Foll. 8a—8b.

This work is also considered to be one of the Paṇḍāraśāstirams. It is in prose and explains the nature and characteristics of Pati, Paśu Pāśam, Māyai, Āṇavam, Karmam or Karma. The author is Ambalavāṇattambirān of Tiruvāvaḍuturai.

Complete.

Beginning :

பெறற பிறப்பே பிறப்பாவடுதுறையி
லுற்றம் பலவாணனேயுக[கி](க)ந்து—சொற்ற
பதிபசு பாசப் பனுவலினை வாக்கான்
மதிபகரும் வாய்தலினால் வந்து.

அறிவு பதி. அறிவித்தாலறிவது ஆன்மா. அறிவித்தாலுமறியாது ஆணவம். மாயை அறிவும் அறியாமையுமாம். கருமந் தனு நின்றபடி ஆன்மா ஆணவமாய் நின்றபோது அறிவற்று மலமாய்ச் சிவத்தை யறிவித்தாலுமறியான். மல நீங்கிச் சிவமானபோது சிவத்தை யறிவித்தாலறிவன். ஆன்மாவைச் சிவமாவரித்தபோது சிவமல்லதொன்றையு மறியான். ஆன்மாவை மலமாவரித்த காலத்து அறிவித்தாலு மறியான் என்பதற்கு உதாரணம்:— 'அறிவிக்கவன்றி' என்றும், 'ஒன்றதாயனேகசத்தி' என்றும் 'அன்னிய மாயான்மாவையுணர்த்தி' என்றும் 'பன்மொழிகளென்' றென்றும் பெத்தமே யறிவாய்த தன்னை வினையைத் தலைவனையறிவித்தாலும் அறிவு செல்லாமையைப் பண்ணிக்கொண்டு நிற்கும் மலச்செயல்.

End :

சிவத்தை ஒழுங்கிலே ஆசாரியர் திருவாக்குக் கேள்வியாலே யறியவும். இது வரும்படி உபாயம்:—சாலோகத்துக்கு உபாயம் தாதமார்க்கமென்றும், சாமீபத்துக்குபாயம் புத்திரமார்க்கமென்றும், சாரூபத்துக்குபாயம் சகமார்க்கமென்றும், சாயுச்சியத்துக்குபாயம் சன்மார்க்கமென்றும் (. . . . .) இப்படி ஆகமங்களினாலே இருக்கையினாலே அதற்குச் சுருதி இல்லையோ? சுவானுபவமில்லையோ? குருவாக்கில்லையோ? கேட்டல், சிந்தித்தல், தெளிதல் நிட்டை என்று நாலோடே கூடியிருப்பது நிட்டையெனவறிக.

Colophon :

பதிபசு பாசப் பனுவலருள் செய்தான்
பதிபசுபா சந்தெரிவோர் பற்றப்—பதிபசுவா

மாற்று வடுதுறையில் வந்தம் பலவாண
னேற்றூர்க ணேக்க கதி.

முற்றிற்று.

(கு-பு.)—

இது பண்டாரசாத்திரங்களுள் ஒன்று. பதி, பசு, பாசம், மாயை ஆணவம், கன்மம் ஆகிய இவற்றின் இலக்கணங்களைச் சுருக்கமாக விளக்குவது; வசனநடையாலாயது. திருவாவடுதுறையில் இருந்த அம்பலவாணத் தம்பிரான் இயற்றியது. இந்தப் பிரதியில் இது முற்று முளது.

(*d*) அனுபோகவெண்பா.

ANUBŌGAVEṆBĀ.

Foll. 9*a*—28*a*. Fol. 28*b* is left blank.

This work is also considered to be one of the Paṇḍāraśāstirams. Herein the author Ambalavānattambirān of Tiruvāvaḍuturai Mutt expresses his self-realization of certain matters, in accordance with the principles of Śaiva Siddhānta.

Complete.

Beginning:

அளித்த கருணை யனுபோகந் தன்னை
விளக்கியொரு பாவின் விரிக்க—வுளக்கணிரு
மெய்யர்கோ முத்திநகர் மேவியசீர் நற்கருணை
யையா நமச்சிவா யா. (க)

ஆசுற்றூர்க் கில்லை யறிவுடைமை யாங்கரன்பாற்
றேசுற்றூர்க் கெல்லாந் தெரிவாகு—மாசற்ற
நல்லார்க் கறிவு ந—க்குமா வென்கருத்தைச்
சொல்லாய்த் தொடுத்தேன் றுணிந்து. (உ)

தோற்றும்போ தற்றுத் தொடர்ந்த குருடதனை
மாற்றும்போ தின்றூ மறைப்பென்னுந்—தோற்றுதற்கு
மற்றொருவர் சொல்லு மதித்ததுபோற் றீயமல
மற்றவர்க்குச் சற்குருவே யாம். (௩)

(* * * *)

பரமன் கருணைப் பசுபதியா நின்ற
பிரமநா னென்றுமிகப் பேசின்—வரமெனக்குத்
தாதா வெனவிறைஞ்சித் தாழ்ந்துநிற்கும்பேதமுனக்
கேதா மதனை யியம்பு. (கக)

End:

ஈங்கிவை யல்லா விசைந்ததிட்டை யெல்லாம்பொய்
தீங்கதுவே யாகச் செயுமதுவாற்—பாங்குடைய
நல்லார்க் கிவையே நலமா மறிவுடைமை
யில்லார் தமக்கேது மில். (உகஎ)

பன்னரிய மெய்கண்டான் பன்னுமருட் போதத்தைச்
சென்னியின்மேற் கொண்டொருநூல் செய்தேனு—லிந்நூன்மெய்
முத்தர்க்கு நெஞ்சத தமுதாம்பொய் மூடர்க்கும்
பெத்தத்தைத் தீர்க்குமருட் பேறு. (உகஅ)

Colophon:

முற்றிற்று.

(கு-பு.)—

இது பண்டாரசாஸ்திரங்களுள் ஒன்று. திருவாவடுதுறை அம்பலவாணத் தம்பிரான் தமது அனுபவத்திற் கண்டனவும் சைவசித்தாந்தத்திற்கு ஒத்தனவுமாகிய பற்பல விஷயங்களை இதில் விளக்கமாகக் கூறியிருக்கிறார். இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது.

R. No. 350.

Palm-leaf. 13¼ × 1 inches. Foll. 23. Lines, 4 in a page. Tamil. Fair.

Purchased in 1916-17 from C. V. Jambulingam Pillai of Mylapore.

(*a*) திரிபுரசுந்தரிதுதி.
TIRIPURASUNDARITUDI.

Foll. 1*a*—11*b*.

A eulogistic poem on Goddess Tripurasundari, a manifestation of Goddess Pārvati worshipped in Puduvai (Pondicherry). The name of the author is not given.

Complete.

Beginning:

நாவினு லுன்னைத் தான்தினந் துதியே
  னற்றவம் புரிந்திட வறியேன்
நறுமல ரெடுத்துன் னடியிணை வணங்கி
  நாமமே மனதினி னினையேன்
பாவிநான் கொடிய வினையினுல் மெலிந்து
  பரதவிப் பதுமறிந் திருந்து

பராமுக மாக விராமலுன் கமல
  பாதமே தந்தருள் புரிவாய்
பூவினி லயன்மா லிந்திரன் முதலோர்
  போற்றிடுங் கருணைவா ருதியே
பொன்னு நன் மணியே யென்னையாட் கொண்ட
  பூங்கம ல[த்த]ாசனத் துமையே
சேவுமே லமர்ந்த வேதபு ரீசன்
  றிருவுள மகிழ்ந்ததெள் ளமுதே
திருநடம் புரியும் புதவையம் பதிவாழ்
  திரிபுர சவுந்தரி யுமையே. (க)

End:

கங்கையில் மூழ்கி மங்கைபங் காளர்
  கடவுணற் சிவகடன் முடித்து(ச்)
கருத்தெனத் திருத்தி வருத்துமா ந(ல்)ல
  காயமே லெங்குநீ றணிந்து
தங்கபொற் சிகர நின்றிருக் கோவில்
  தன்னையே வலமது புரிந்து
சன்னிதா னத்தி னின்னையான் வணங்கத்
  தமியெனை யாண்டருள் புரிவாய்
மங்களா கார கங்கணு வீர
  மயேசுவரி சடாட்சர விமலி
மருவளந்துளப . . . பபனவிசைய
  மால்சகோ தரிசெய வீரி
திங்களுங் கங்கை சூடுசெஞ் சடையர்
  செழுமறை[ப்] புகழ்புரிவாசர்
திருநடம்புரியும் புதவையம்பதிவாழ்
  திரிபுரசவுந்தரியுமையே.

ஆகலக்கம்—கக.

(கு-பு.)—

இது புதவையில் எழுந்தருளியிருக்கும் திரிபுரசுந்தரியம்பிகை விஷயமான தோத்திரம். இதை இயற்றிவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றும் உள்ளது.

(b) வடிவுடையம்மை விருத்தம்.

VAḌIVUḌAIYAMMAI VIRUṬṬAM.

Foll. 12*a*—19*a*.

A poem eulogising Vaḍivuḍaiyammai, a form of Goddess Parvati worshipped in the sacred shrine at Tiruvoṟṟiyur near Madras.

C o mplete.

Beginning :

சுந்தரி சவுந்தரி நிரந்தரி துரந்தரி
சோதியாய் நின்ற வுமையே
சுக்கிரவா ரப்பெருமை கண்டுனது சே[ர்]வையுஞ்
சொல்லவு மெளிதாகுமோ
சந்ததமி யாதியே செந்தமிழ்ப் புராணியேயென்
சலிப்பெலா மாற்றி விடுவாய்
சற்குணி மொற்குணி (?) நிர்க்குணி சதுர்வேத
சமயமும் வாறுநீயே (?)
சிந்தைமிக நொந்துயான் வந்தகுறை யுன்றன்முன்
செப்பவுங் கேட்க விலையோ
சேயினை பெறுதவளோ நீதியறி யாதவளோ
செகமெலாம் பெற்ற தாயே
தந்திர முகுந்தனிட[த்]தங்கைசிவ மங்கையே
தரணிபுக ழொற்றியூர் வாழ்
தங்கமல நாதர்சடை கங்கையுரு வானகொடி
திங்களொளி வானவடிவே. (௧)

End ;

மண்மீ திருக்களவு மின்றுமுத லாகியே
மனுவொன்று கேட்ப தடியேன்
மாறுத செல்வமுந் தேறவே கல்வியு
மனுநீதி நல் வழிகளுங்
கண்களிருள் மூடாமல் காயமிக வாடாமல்
கால்கைகண் ணேகாம லுங்
காலனுக் கஞ்சாமல் கலியோனு மிஞ்சாமல்
கடுங்கோபம் வாராம லும்
பண்ணவே தர்மமும் பலவுப காரமும்
பசித்தபேர்க் கமுதுதவவும்
பார்தனிலு மிப்படி(ச்) சீருட னிருந்தபி[ன்]னுன்
பாதத்திற் சேர்த்துக்கொள்வாய்
தண்ணவிட(?) பாகத்தில் வர்ணனிற மானவளே
தரணிபுக ழொற்றியூர் வாழ்
தங்கமல நாதர்சடை கங்கையுரு வானகொடி
திங்களொளி வானவடிவே. (௧௧)

(கு-பு.)—

இது, திருவொற்றியூரிற் கோயில்கொண்டிருக்கும் வடிவுடையம்மையின் விஷயமான தோத்திரம். இயற்றிவர் பெயர் தெரியவில்லை. முற்றும் இருக்கிறது. செய்யுள் நடை தாழ்ந்தது.

இதன் பின்னர் பாகவதச் செய்யுட்கள் சில, தொடர்ச்சியில்லாமல் 4 ஏடுகளில் எழுதப்பட்டிருக்கின்றன.

R. No. 351.

Palm-leaf. 9 × 1⅛ inches. Foll. 44. Lines, 4 in a page. Tamil. Fair.

Purchased in 1916-17 from C. V. Jambulingam Pillai of Mylapore.

சுப்பிரமணியரந்தாதி.

SUPPIRAMAṆIYARANDĀDI.

A kind of Prabandam called Andādi written in praise of God Subrahmaṇya or Muruhakkaḍavuḷ worshipped in the sacred shrine at Mērur. The work is full of mistakes and the name of the author is not given.

Complete.

Beginning:

வெற்றி மயிலேறும் வேலவரே மே(ரூ)ரில்
நெற்றிவிழிக் கண்[கள்ெ](ணி)ரண்டு நித்திரையோ—சத்தி
வள்ளிதெய் வானை வருந்தி யழைத்தானே
புள்ளியிது வென்றெனக்குப் போட்டாய். (க)

முத்திதரு ஞானம் மொழிமங்கை வேலர்மேல்
பத்தியுட னந்தாதி பாடவே—வெற்றியுடன்
அரிபிரமர் காணு[த](வ)ரன்மதலாய் மேரூர்வாழ்
கரிமுகனைக் கைதொழுதேன் காப்பு. (உ)

(* * * *)

ஏதுபிழை செய்தாலு மேழையே னுக்கிரங்கி(த்)
தீது புரியா(த) தெய்வமே—நீதி
தழைக்கின்ற மேரூர தையல்வள்ளி பாகா
பிழைக்கின்ற வாறெனக்குப் பேசு. (௩)

End:

தினைந்தேன்மேரூரை நித்தமறுமுகனை(ப்)
புனைந்தே னடிபணியப் பூரித்தேன்—மனந்தேறி(ப்)
பூசை புரியும் பூதலத்தி வடியாரை(ப்)
பாசமுடனவர்பாதம் பணிந்து. (க00)

(* * * *)

பெருக்க வறுமுகவா பெருமையுடன்மேரூரி
லிருக்கவரந்தருவாயிந்திரன்போ—லுருக்கமுட
னந்தாதி செய்த வடியார்களீடேற
வந்தாரே வேல்முருகர்வாழி. (க0உ)

Colophon:

முற்றும்.

(கு-பு.)—

இது மேரூர் முருகக்கடவுள் விஷயமான துதி. இதை இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. பிழைகள் பல நிறைந்துள்ளன. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

R. No. 352.

Palm-leaf. 10¼ × 1 inches. Foll. 12 Lines, 4-6 in a page. Tamil. Good.

Purchased in 1916-17 from C. V. Jambulingam Pillai of Mylapore.

மாட்டுவைத்தியம்.

MĀṬṬUVAITTIYAM.

A treatise in prose explaining the method of preparation of the different kinds of medicines for the curing of certain cattle diseases. The name of the author is not given.

Beginning:

மாடுகள் வைத்திய அட்டவணை.

வண்டி சவாரிபோய்வருகிற எருதுமாடுகளுக்குப் பட்டை தண்ணீர் :—

வேப்பம்பட்டை	நறுவளி(ப்)பட்டை.
அரசம்பட்டை.	நாகப்பட்டை.
ஆலம்பட்டை.	புளியம்பட்டை.
அத்தி(ப்)பட்டை.	கொஞ்சி(ப்)பட்டை.
ஓதியம்பட்டை.	பனம்வேர்.
நுணுப்பட்டை.	அறுகம்வேர்.
எட்டிப்பட்டை.	கல்லாலம்பட்டை.
வேலம்பட்டை.	துத்திவேர்.

இவைகளில் வகைக்கு இரண்டு கைக்கொண்ட ஒருபிடியெடுத்து நன்றாய்(ெ)நருக்கி ஒரு பெரிய பானையிற் போட்டு அது நிறைய காடி விட்டு மூன்று நாளானபின்பு தினந்தோறும் காலமே ஒரு பொட்டில் மாடு ஒன்றுக்குக் கொடுக்க(த்)தீரு(ம்) வியாதி இரைப்புச் சூடு மார்வலி தீரும். இதை(க்)கொடுக்கு முன்னதாக வாய்கழுவுகிற கிஷாயத்தைக்கொண்டு வாய்கழுவிப்போட வேண்டியது. இது அனுபவம்.

மாட்டுக்கு வாய்கழுவுகிற கிஷாயம் :— கடுக்காய் பலம்-௫, வேப்பம்பட்டை பலம்-௰, கருவேலம்பட்டை பலம்-௰, இ[து](வை)களையிடித்து, ஒரு பானையில் போட்டு வேண்டிய சலம் விட்டு(க்) காய்ச்சி(க்)கொண்டு, வாயை நன்றாய் அலம்பவும். இது அனுபவம்.

End:

பசுமாட்டுக்கு மருந்து.

ஆட்டுத்தலை ஒன்று வாங்கிவந்து அவித்து எலும்புகளை எடுத்துப்போட்டு கறிகளையிடித்து எடுத்துக்கொண்டு இதிலே வெள்ளைப்பூண்டு பலம்-௫, வால் மிளகு பலம் ௨௰ நல்ல மிளகு பலம்-௨௰, நல்லெண்ணெய் பலம்-௫ ; எண்ணெயை ஒரு சட்டியில் விட்டு மற்றதை இடித்து(ச்) சூர்ணஞ்செய்து சட்டியில்போட்டு இறைச்சியையும் சேர்த்து(க்)கலந்து அடுப்பில்வைத்துக் கிளரி உள்ளுக்குக் கொடுக்கிறது ; சாயங்காலம் பச்சரிசி(யும்) பச்சைப்பயறுங் கஞ்சி

கா(ய்)ச்சி வைக்கவும். பின்பு வைக்(கோ)க(ா)ல் போடவும் மறுபடியும் இரண்டு நாள் வெளியே அனுப்பாமல் வீட்டிலே கட்டி, பச்சைப்புல் போடாமல் ஷை கஞ்சி கா(ய்)ச்சி ஆறவைத்து ஒரே தண்ணீர் காட்டவும்.

(கு-பு.)—

இது மாடுகளுக்குவரும் கோமாரி, இரைப்புச்சூடு, மார்வலி முதலிய வியாதிகள் தீர்வதற்கு மாந்த மசாலா, குளிர்த்தி மசாலா, கருமசாலா உடம்பு மசாலா முதலிய மருந்துகள் செய்யும் வகையைக் கூறுவது. தாழ்ந்த வசன நடையாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

R. No. 353.

Palm-leaf. 11¾ × 1⅜ inches. Foll. 57. Lines, 7 on a page. Tamil. Fair.

Purchased in 1916–17 from M.R.Ry C. V. Jambuliṅgam Piḷḷai of Mylapore.

(*a*) ஒட்டியநூல்.

OṬṬIYANŪL.

Foll. 1*a*—17*a*.

A treatise in poetry dealing with the preparation of magical medicines and witchcraft Six ways of annoying one's enemies are mentioned here. The work is attributed to Oṭṭiyamuni.

Seems incomplete.

Beginning:

ஒட்டியவிந்தை ஓம்.

ஆதியாமெங்கள்வாசலந்தணர்முனிவர் பாதமமி
வாதியா மாநதரிக மைவரு மு . . . கண்டாய்
நீதியா மொட்டியனே நிணந்தினிற் சேர்ந்த வொட்டியன்
வாதியா முனிவர் பாதய வந்தடி காப்பதாமே. (க)

ஆதியாய் வந்த வொட்டியனையனே போற்றி யென்று
வசியமும் மோகமுந்தான் வந்தடி பணிந்து போற்றி
வாதியைப் போற்றி யேன்று வந்தவா கருஷணம் போதும்
நீதியாம் வித்துவேஷணங்க ணிமிஷத்தில் மாரணங்கள்
பேதியா மெட்டாங் கர்மம் போர்த்தனர் பிழைக்க வென்றே. (உ)

நித்திரையில் துவ, சத்துருமாரணம் :—

சுக்குட ஞெமமஞ்சள் சுடுகாட்டெலும்புங் கூட்டி
அக்காலை நிணந்துகொண் டம்மியிற் பொடியே செய்து
பக்கமாயிருந்து கொண்டு படுக்கையிற் றூவிநிற்க
. . . . யெல்லாரும் வசமாகித்தாணிருப்பரே நாவடங்கி. (உ)

End:

உருவுடன் கருவை வைத்து ஓங்கார முள்ளேவைத்து
மருவுரு போடவேண்டில் மறையவேயிருந்துகொண்டு
மனதிலே தியானஞ்செய்து உருவுமே போடுவாயே. (கரு)

குருவருடப்பானகில் கோபமுமில்லானகில்
வயதுமே முப்பதாகில் வகையுடன் சக்கரதேவியை
அறிவுடனுதறித்தால் வந்தவள் முன்னே நின்று
தருவளே கனசம்பத்துத் தாவென்று நங்கினேம்நாம். (கசு)

(கு-பு.)—

இது வசியம், ஆகர்ஷணம், மோகனம், ஸ்தம்பனம், மாரணம், வித்வேஷணம் முதலிய மாந்திரீக வித்தைகளைப்பற்றிக் கூறுவது. 'ஒட்டிய முனி' என்னும் பெரியார் இயற்றினரென்று கேட்கப்படுகிறது. செய்யுட்கள் மிக்க பிழைகளுடன் இருக்கின்றன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இல்லையென்று தோற்றுகிறது.

(b) சல்லியநூல், உரையுடன்.
SALLIYANŪL WITH COMMENTARY.

Foll. 18*a*—45*a*.

Similar to the above; and by Salliyamuni.

The text is complete but the commentary is incomplete.

Beginning:

ஆதியா மாந்திரீக மாய்ந்துணர் முனிவர்தம்மி
னீதிசேர் சல்லியமென்ன நிலத்தினிற் செய்த நூலைத்
தீதறு தமிழினலே செப்பினாடிக்கயான்றன்
சோதிசேர் செம்பொற்பாதஞ் சூட்டினஞ் சென்னிமீதே. (க)

(* * * *)

ஆகமுறு வசிய(மோக) மறிந்தவர்[க்]கருணை தம்பனம்
யோகமா முச்சாடன(மேடனை)யெட்டாங் கர்மம்
வேகமா மனதையுன்னி வியந்தரு மாந்தரீக
மாகவே யிவைகளெல்லா மாய்ந்தவ ரறிவுள்ளோரே. (உ)

(* * * *)

மஞ்சளி லுருவாஞ் சூதம் வாயுவாஞ் சென்னி கண்வாய்
கொஞ்சமாய்க் கருவைத் தொட்டுக் கூறுவோ மின்னங்கேளாய்
தஞ்சிய மின்னார் வேய்ந்த மாலையிற் சுத்திவைக்க
அஞ்சிய பிரமை கொண்டங் காற்றுவார் பெண்ணைத் தேடி.

(* * * *)

உரை: சக்கொன்றரைத்துப் பாவை பண்ணி சத்துரு நகமும் மலமும் இதிற் கட்டிப் பேரும் பிறந்த நாளும் எழுதி பாவை வயிற்றிலே வைத்து (. . . . . . .) கட்டை யெடுத்து உருக்கிப் போடவும். (கூ)

End:

ஓரொரு கருமங் கற்றோ ருலகெலாந் தானய் திற்பா
ரோரொரு கருமங் கற்றோ ருயர்நரகத்தில் வாழ்வா
ரோரொரு கருமங் கற்றோ ருயந்ததோர் பெரியோராவா
ரோரொரு கருமங் கற்றோ ருயர்குரு வருளே வேணும். (கஅ)

குருவருளாலே சல்லியன் கூறிய தொழில்களெல்லாங்
குருவருளாலே கண்டு குறிப்புடனறிய வேணுங்
குருவருடானே தெயவங் குருவருடானே மூர்த்தி
குருவருளாண்[டு](ட) பாதங் கொண்டனென் சென்னிமீதே. (கக0)

முற்றும்.

(கு-பு.)—

இதுவும் வசியம், ஆகர்ஷணம் முதலியவற்றின விஷயமாகக் கூறுவதே. சல்லிய முனி என்னும் பெரியார் இயற்றினரென்று தெரிகிறது. இந்தப் பிரதியில் இந்நூல் மூலம் முற்றும் உள்ளது. உரை 77-வது பாட்டு வரையுமே உள்ளது. இதன் பின் 6 பக்கம் ஒன்றும் எழுதப்படாமலும், 9 ஏடுகளில் தொடர்ச்சியில்லாமற் சில விஷயங்கள் எழுதப்பட்டும் இருக்கின்றன.

R. No. 354.

Palm-leaf. 7 × 1⅛ inches. Foll. 53. Lines, 7–8 n ia page. Tamil. Injured.

Purchased in 1916–17 from M.R.Ry. C. V. Jambulingam Pḻḻiai of Mylapore.

(*a*) கௌளிசாஸ்திரம்.

GAUḶIŚĀSTIRAM.

Foll. 1*a*—16*b*. Fol. 17 is left blank.

A treatise dealing with predictions to be made or inferences to be drawn by means of listening to the sound of a lizard.

Incomplete.

Beginning:

கெவுளி சொல்ல ஆரூடம் பார்ப்பது.

வல்லியுமை கேட்ப மகிழ்ந்தரனூர் தா . . . ப்ப
சொல்லி யடைவாய்த் தொகுத் துரைப்ப—பல்லிநூல்
பாரிற் பலரறியப் பாடினன் பாற்கரன் வாழ்
வீரற் கரசனும் வேந்து.

அலைகட லேழுஞ்சூழ்ந்த வவனிவா ழருந்தவத்தோர்
கலைபல வுரைத்த நூலிற் காட்டிய சோதி டத்தி
னிலைபல வுதையங் கொண்டு நின்மலன் றாளை வாழ்த்தி
பலாபலன் பார்த்து நல்ல பல்லிநூல் பகர லுற்றேன். (க)

End:

காற்றுட னிருதி கீழ்வாய் கண்டிடில்தனக்கே யாகுங்
கூற்றமில் குடை(க்)கிழங்கி கூறிய யீசகார
மாற்றலர் சோமன் தெற்கு கருவினை பிறர்க்கேயென்றுந்
தோற்றிய நன்மை தின்மை சொல்லிய பல்லிநூலே. (ௐஉ)

(* * * *)

சொல்லிய மந்தன் வெய்யோன் சுடர்மதி யென்று மூவ
ரெல்லைகொள் வலதுளாவர்மத்தியல்பவரிடதுளாவர்
வல்லிகேளிவர்களுக்கு வகுத்தநாழிகையே தென்னில்
பல்லிநூல் வல்லோ ரெட்டுத்திக்கிலும் பகர்வதாமே.

அருக்கன் செவ்வாய்[ப்] பொன்புந்தி யான வெள்ளி சனிதிங்க
ளிருக்கும் பாம்பு வடகீழா மிதுவே கிரக நிலையாகு
மருக்கன் றிசையிற் கெவுளியுறில் மற்றத் திசையில் வருங்கிரக
மிருக்கு மந்நாள் வருங்கிரக மிருவர் கூடி(ற்) பலனுரைப்பாம்.

* * * *

(கு-பு.)—

இது ஆரூட விஷயமானது. பாற்கரரென்பவர் இயற்றினரென்று முதலிலுள்ள செய்யுளால் தெரிகின்றது. இந்நூல் இதில் முற்றுப்பெறவில்லை.

(b) தத்துவநூல்.
TATTUVANŪL.

Foll. 18*a*—48*a*.

A treatise explaining the 96 Tattvas or fundamental principles of the Śaiva Siddhānta. These principles are said to have been related to the sage Kapila by Paramaśiva.

Complete.

At the end of the work there are five leaves containing stanzas attributed to Siddhars.

Beginning:

வேகமா நெறி (. . . . . .) போற்றுவாம்.

(* * * *)

பரமசிவன் கபிலரிஷிக்கு உபதேசம் பண்ணின தத்துவம்.

"இனி இந்தச் சரீரம் எண்சாண் நீளம் நாற்சாண் பருமம். தன் விரலாற்றொண்ணூற்றாறு விரல் பிரமாணம். இப்படிக்கொத்த சரீரத்தில் தத்துவம் தொண்ணூற்றாறுண்டு; அவையாவன :—

இனி வாசல், 9. பொறி, 10. புலன், 10. ஆதாரம், 6. மண்டலம், 3. நாடி, 10. வாயு, 10. தாது, 7. ராகம், 8. கோசம், 5. கரணம், 4. அவத்தை, 5. குணம், 3. மலம், 3. வியாதி, 3. ஆகத் தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் இந்தத் தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் விபரம் ;—

இனி வாசலாவன—செவி, 2. கண், 2. நாசி, 2 வாய், 1. குய்யம், 1. குதம், 1. ஆக வாசல் ஒன்பதுக்கும் வினாவுடனே விவரமறியவும்.

End:

இப்படி தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் ஆகமப்படியே வினாவுடன் விவரமறியவும்."

இந்த வாக்கியம் பராபரமாகிய பரமேசுவரனை நோக்கி இருடிகள் தேவர்கள் முனிவர்கள் இப்படிக்கொத்த பெரியோர்கள் அரிய தவத்தைப் பண்ணினபடியினாலே ருத்திர வடிவெடுத்து வந்து அகத்தியர், புலத்தியர் (. . . . .) நந்திவாக்கியம் படித்துத் தேர்ந்தவர்க்கெல்லாம் பரகதி முத்தி வழியென்று பரதேசிநாதர் அருளிசெய்தவாறு.

பரதேசிநாதர் பாதமே கதி.

Colophon:

தத்துவ முடிந்தது. முற்றும்.

(கு-பு.)—

இது தொண்ணூற்றாறு தத்துவங்களின் இலக்கண முதலியவற்றை விவரமாகக் கூறுவது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

இந்நூல் பூர்த்தியானதன்பின், ஐந்து ஏடுகளில் சித்தர்கள் பாடல் சில எழுதப்பட்டிருக்கின்றன.

R. No. 355.

Palm-leaf. 16⅜ × 1⅜ inches. Foll. 218. Lines, 7-8 in a page. Telugu. Injured.

Presented in 1916-17 by Prativādi Bhayaṅkaram Vedāntācāriyar of Vijayarayi in the Kistna district.

(*a*) தத்துவதீபப்ரகாசம். TATTUVADĪPAPRAKĀŚAM.

Foll. 1—143.

Same work as that described under No. 851 of the D.C.Tam. MSS., Vol. II. The author is Vādikēśari—Aḻagiyamaṇavāḷajīyar and not Manavāḷamāmuni as stated in the number quoted above.

Complete.

End:

அஷ்டாக்ஷரமந்த்ரார்த்த தத்யாதாத்ம்யவேதிநஃ |
ஹிதஃ ப்ரபதநாகாரோ த்வயார்த்தஃ ஸம்ப்ரதர்ஶ்யதே ||

என்று அனந்தரம் அஷ்டாக்ஷர மந்திரத்தினுடைய தத்வயாதாத்மியத்தை அறிந்தவனுக்குப் பிரபதன ரூபமான ஹிதானுஷ்டானமாயிருக்கிற த்வயார்த்தம் காட்டப்படுகிறது :—

அதாவது மூலமந்த்ரத்திலர்த்தானுஸந்தானத்தாலே அறுதியிடப்பட்ட ஸர்வப் பிரகார பகவத் பாரதந்த்ரியத்தோடே கூடின ததேக சேஷத்துவ ரூபமான ஆத்ம ஸ்வரூப யாதாத்மியத்தையுடையவனுக்கு ஸ்வரூபானுரூபமான ஹிதானுஷ்டானம் பிரபதனமென்றும் ஆசார்ய ருசி பரிக்ரஹீதமாய் த்வயமென்று பேரான மந்த்ர ரத்நத்தாலே சொல்லப்படுகிறதென்றபடி ஆசார்ய ருசிபரிகிரகீதமான வித்யை இதே ஸாதுதாயாய்க்கொண்டு

(* * * *)

[illegible] | அத்யேஷ்யதே ச இமம் தர்ம்யம் ஸம்வாதமாவயோஃ |

என்று நாமிருவரும் நின்று வார்த்தைசொன்ன தர்ம யுக்தமான இந்தப் பாசுரத்தை யாவனொருவன் அத்தியயனம் பண்ணுமென்று தொடங்கி

மேலுண்டான கிரந்தத்தாலே இந்த ஸ்ரீகீதா ரூபமான ப்ரபந்தம் கொண்டாடப்படுகிறது ; ஆகையாலே 'ஸர்வதர்மாந்' என்று தொடங்கிச் சொல்லுகிற இரண்டு சுலோகத்தாலுமாதல், சரமசுலோக மூன்றாலுமாதல் ஸர்வோபாயங்களிலும் விலட்சணமான பகவதேகோபாய த்வவ்யவஸாயமே பகவான் தன்னாலே ஸாதரமாக விதிக்கப்பட்டதாகையாலே இந்த உபாயத்திற்கே ப்ராதாந்யாதிசயத்வம் ஸம்ப்ரதிபன்னமாகையாலே இந்த உபாய விசேஷமே சர்வாதிகாரிகளுக்கும் அபிமதமான புருஷார்த்தம் ஸித்திக்கைக்காகவும் தாங்கள் உஜ்ஜீவிக்கைக்காகவும் ஸமாச்ரயிக்கப்படுமாகையாலே இவ்வர்த்தம் திரவத்யமென்னதாயித்து.

"ஸௌம்யஜாமாத்ரு முநிநா ஸர்வலோகஹிதைஷிணா
சரமச்லோக ஸாரார்த்த தத்த்வதீப: ப்ரகாசித: |"

என்று ஸௌம்ய ஜாமாத்ரு முனியாலே குரு ஸ்நேஹ தசையில் அந்வயத்தாலே சரம ச்லோகத்தினுடைய ஸாரார்த்தமான தத்வதீபமானது காட்டப்பட்டதென்னதாய்த்து. (. . . . .) இப்படி தீபப்பிரகாசம் ஸம்பூர்ணமாய்த்து.

Colophon:

ஸுந்தரஜாமாத்ரு முநே: ப்ரபத்யே வரணாம்புஜம் |
ஸம்ஸாரார்ணவஸம்மக்ந ஜந்துஸந்தாரபோதகம் |
க்ஷத்ரியவம்சத்ராண ப்ரபௌத்ராண சோபநம் |
வாதிகேஸரிணம் வந்தே ரம்யஜாமாத்ருதம் முநிம் ||

க்ரோதிஸம்வத்ஸர மார்கசீர்ஷ ஸப்தமி || ஸோமாடபூஷி வெங்கடாசார்லு-தீபப்ரகாசிக ஸ்வஹஸ்தங்கா வெஞ்சேபுசே ஸமாப்துலு.

(கு-பு.) --

இது டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 851-ம் நம்பர் பிரதிபோன்றது. அதில் இல்லாத பின் இரண்டு பிரகரணங்களும் இதில் உள்ளன. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

(*b*) தத்த்வதீபப்ரகாச:.
TATTVADĪPAPRAKĀŚAM.

Foll. 144*a*—218*a*.

See the Sanskrit part of this Catalogue.

R. No. 356.

Palm-leaf. $17\frac{1}{8} \times 1\frac{1}{2}$ inches. Foll. 158. Lines, 8 in a page. Telugu. Injured.

Purchased in 1916–17 from the President, Sarasvati Club, Vijayarayi in the Kistna district.

தத்வதீபப்ரகாசம்.

TATTVADĪPAPRAKĀŚAM.

Same work as the above.

Begins in the first Prakaraṇa and breaks off in the third Prakaraṇa.

(த-பு.)—

இது முன் பிரதி போன்றது. இதில் முதற் பிரகரணத்திலிருந்து மூன்றும் பிரகரணத்தில் "நவகவஸோநறுவெஷெ்ஷ" என்னும் பகுதி வரையில் இருக்கிறது.

R. No. 357.

Palm-leaf. 18⅜ × 1⅜ inches. Foll. 173. Lines, 6-7 in a page. Telugu. Much injured.

Purchased in 1916-17 from the President Sarasvati Club, Vijayarayi, in the Kistna district.

குருபரம்பராப்ரபாவம்.

GURUPARAMPARĀPRABĀVAM.

Same work as that described under R. No. 45(*a*) of the Tamil Triennial Catalogue, Vol. I, Part 2. By Pinbalagiyapperumāḻjīyar. An account of the lives of Periyavāccānpiḻḻai, Vaḍakkutteruvīdipiḻḻai, Kūrakulōttamar, and others are also given here as found in the Yatīndrapravaṇaprabhāvam.

End:

தமக்கு அபிமத சிஷ்யரான ஈயுண்ணி மாதவப்பெருமாளென்கிற சிறியாழ்வார் நம்பிள்ளைக்கு முப்பத்தாறுயிரமும் பிரசாதித்தருளினார். ஒருநாள் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை திருமாளிகைக்கு எழுந்தருள அங்குள்ளாரெல்லாரும் நம்பிள்ளை திருவடிகளிலே வந்து ஸேவிக்க, அப்போது வடக்குத் திருவீதிப்பிள்ளை தேவிகள் ஈரப் பு(டை)டவையுடனே தண்டனிட்டிருக்க நம்பிள்ளை அவரருகு நின்று ஸ்திரீ ஜனங்களைப் பார்த்து இந்தப் பெண் ஈரப்புடைவையுடனே இருப்பானேன் என்ன அவர்கள் சொன்னபடி:—நாலு நாளுந் தூரஸ்தையாயிருந்து இப்பொழுது தீர்த்த மாடிவந்து தேவரீர் திருவடிகளிலே ஸேவிக்கிறாரென்ன, அது கேட்ட நம்பிள்ளை [கண்டு] அவளைப், "பெண்ணே! இங்கே வாரும்" என்றழைத்துத் தன் திருக்கையாலே அவளுதரத்தில் ஸ்பர்சித்து, "என்னைப்போலே ஒரு பிள்ளையைப் பெருவாயாக" என்று திருவுள்ளம்பற்றியருளினார்; அ[த்]தைக்கண்டு வடக்குத் திருவீதிப் பிள்ளையும் தமக்குக் குமாரர் உண்டானார்; ஆசார்ய திருவுள்ளத்துக்கு உகப்பாமென்றறிந்து ததனுகுணமாகவர்த்திக்க,

(* * * *)

என்று வரவரமுனி சரிதையில் எறும்பியப்பர் அருளிச்செய்தபடி திருவனந்தாழ்வானும் அப்படியே தன் திருவவதாரத்திற்கு இடம் பார்த்து ஆழ்வார் திருநகரியிலே அண்ணன்றேவி கர்ப்பத்திலே அடைந்து நவமாசம் நிறைந்து பத்தாமாசம் சென்றவாறே "செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள், சீருலகாரியர் செய்தருளினகலே தெளி சுவொலிந்திய நாள், (?) மந்தமதிப் புவிமானிடர் தங்களை வானிலுயர்த் திடு நாள், மாசதிர் ஞானியர் சேரெதி ராசர்தம் வாழ்வு முளைத்திடு நாள், கந்தமலர்ப் பொழில் சூழ்குருகாதிபர் கலைகள் விளங்கிய நாள், காரமர் மேனியரங்கநகர்க்கி றைகின்ன கணாகளித்திடு நாள், (?)

"செந்தமிழ் வேதியர் சிந்தைதெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருலகாரியர் செய்தருளினகலைதேசு புலிந்திய நாள் (?)
மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்த்திடு நாள்
மாசதிர் ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்தமலர்ப்பொழில் சூழ்குருகாதியர் கலைகள் விளங்கிய நாள்
காரமர்மேனி யரங்கனகர்க்கிறை[கின்ன]கண்ணர்களளித்திடுநா
அந்தமில்சீர்மண வாளமுனிப்பர னவதாரஞ் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடு மைப்பசியிற்றிரு மூலமதானது வந்திடுநாளே."

இதனாற் சொல்லப்படுகிற ஸாதாரண ஸம்வத்ஸரத்தில் ஆசுவி[ன]ஜ மாசத்தில் திருமூலத்திலே உபய விபூதியும் கொந்தளிக்கும்படி சொட்டை குலத்திலே[ய] திகழக் கிடந்தார் திருநாவுடையபிரான் தாதரண்ணரையர்க்குக் குமாரராகத் திருவவதரித்தருளினர்.

(கு-பு.)—

இது ரூவருடத்திய காட்லாக் 45(a) நம்பர் பிரதி போன்றது; ஆயினும் அதில் இல்லாத பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, கூர குலோத்தமர், அழகியமணவாள ஜீயர் முதலியவர்கள் சரித்திரம் இதில் அதிகமாக உள்ளன.

R. No. 358.

Paper. 11 × 9¾ inches. Foll. 45. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M.R.Ry., Mahāmahōpādhyāya V. Swāminathaiyar avl., Tamil Pandit, Presidency College, Madras.

சதாசிவரூபம் உரையுடன்.

SADĀSIVARŪPAM WITH COMMENTARY.

A Tamil rendering by Saṭṭanātha Vellalār of Sīkāḻi in the form of verses of the Sanskrit Vātulāgama. The different manifestations of God Śiva and the nature and characteristics of what is understood as Attuvākkaḷ are explained herein.

Complete.

Beginning:

உயர்மறை புகழ்சிவ மோங்கு சதாசிவ
னியலுறு மகேச னெனமுன் ருயலவை

யருவே யருவுரு வுருவா யடைவே
யரிதுண ரொன்றைந் தையைந் தாகி
யொருதொகை முப்பத் தொன்ரு கும்மே.

எ-து. வேதத்தின் முடிவாகிய மகாவாக்கியம் புகழப்பட்ட நன்மை மிகுந்த நின்மலசிவம், அதில் ஆத்ம இரக்கமே வடிவாகிய சதாசிவம், அந்த ஆன்ம இரக்கமே வடிவாகியவற்றை நடத்தும் மஹேசுரம் என்று மூன்று வகைப்படும்; இதில் நின்மலசிவம் வடிவிறுதி; சதாசிவஞ் சத்திகாரியத்துடனேகூடி வடிவும் வடிவிறுதியுமாயிருக்கும். மகேசுரன் அந்தச் சத்திகாரியமான வயிந்தவகாரியத்தை நடத்தும் வடிவையுடையது. வாக்கு மனதீதமான சிவமொன்றும், சதாக்கியமைந்தும், மஹேசுரம் இருபத்தைந்துமாக இவை முப்பத்தொன்றுஞ் சிவனுடைய வுண்மையாகிய தத்துவமென்று சொல்லப்படும். (க)

End:

இந்த நிலையிற் றரிசன மென்று
மந்தா திருப்பது ஞான பூசை
யந்தரி யாகமு மாம்புற யாகமு
மிந்த நெறிபிறி வில்லா தாதலில்
புந்தியில் ஞான பூசை யென்றது.

கீழ்ச்சொன்ன தெரிசனம் அந்தரியாக பூசை யுயர்தலாகிய ஞானக்கிரியை சேர்ந்தது (. . . . . .) அதுவே கிரியாகமென்றும் பேரானது. (௱௬௪)

அவ்வி . . . (பூ)சையும் பிரித்தருச் சிப்பது
பொய்யில் கிரியா பூசையென் றதுவே.

எ-து. இப்படிச் சொல்லப்பட்ட தெரிசன . . . . ாகிய ஞானபூசையிலே அற்புதமுதல்வனுகிய அனுபோகசிவனைப் பூசைபண்ணுமதான சீவன் முத்தர் நிலைபேருன சாயுச்சியமே பெறுகை சந்தேகமில்லை யென்றவாறு. (௱௬௫)

Colophon:

முற்றும். சதாசிவரூபமுற்றும்.

(கு-பு.)—

இது காமிகாதி சைவாகமங்கள் இருபத்தெட்டனுளொன்ருகிய வாதுளாகமத்தின் மொழிபெயர்ப்பாகும். இந்நூலில் மூர்த்திகளின் பேதங்களும், அத்துவாக்களின் இலக்கண முதலியனவும் விவரமாகக் கூறப்பட்டுள்ளன. சீகாழியில் இருந்த சட்டநாதவள்ளலென்பார் இதைத் தமிழில் இயற்றினரென்ப. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

R. No. 359.

Paper. 11 × 9¾ inches. Foll. 25. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. of Śāmavēdam Śrinivāsā Appalācaryalu Garu of Gautala, Godavari district.

திருவாய்மொழிவியாக்கியானம்.
TIRUVĀYMOḺIVIYĀKKIYĀNAM.

Gives the purport of each of the ten centums and of the hundred Daśakams contained in the Tiruvāymoḻi of Nammāḻvār. The name of the commentator is not given.

Complete.

Beginning :

ஸ்ரியஃபதியாய் விலக்ஷணஸ்வரூப ரூபகுணவிபூதி யுக்தனான ஸர்வேஶ்வரன் ஸகலாத்மாக்களுக்கும் தன்னோடு நாராயணத்வப்ரயுக்தமான குடல்[து] (தொ)டக்குண்டாயிருக்கச்செய்தேயும் சிலர் ஸம்போக ஸ்தானமான பரமபதத்திலே அப்ராக்ருதமான வடிவை எடுத்துக்கொண்டு தன்னை அநவரதம் அநுபவித்து (. . . . . . .) தீவ்ரஶரணாகதி யென்று பெருமையை யுடைத்தான ப்ரபந்தத்தில் முதற்பத்தால் பகவத் கைங்கர்யம் பரமப்ராப்யமென்று அறுதியிட்டார்; இரண்டாம்பத்தால் அந்தக் கைங்கர்யத்திற் களையைப்பரித்தார். மூன்றாம்பத்தால் விரோதிகழிந்த கைங்கர்யம் பாகவதஶேஷத்வபர்யந்தமாயிருக்குமென்றார்.

End :

இப்படி பரமபதத்திலேபுக்கு நிரதிசயானந்தயுக்தராய் நித்யஸூரிகள் திரளிலே இருக்கிறாராகத் தம்மை யநுஸந்தித்து இது ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமாய் பாஹ்ய ஸம்ஶ்லேஷ யோக்யமல்லாமையாலே ஸம்ஸாரத்திலே ஸம்ஸாரோசித விருந்தவன் (. . . . .)

காலாட்டின ப்ரக்ருதிஸம்பந்தத்தையும் அறுத்து பரமபதத்திலே கொண்டுபோய்நித்யஸூரிகளோடே ஒரு கோவையாக்கி நித்யகைங்கர்யம் கொண்டருள அத்தாலே தாம் நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராய் ப்ராப்தஸமஸ்த மநோரதரானபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார் முனியே நான் முகனில் (தி-10 : 10-1). (க00)

(கு-பு.)—

இது திருவாய்மொழி என்னும் பிரபந்தத்தில் ஒவ்வொரு சதகமும் ஒவ்வொரு தசகமும் இன்ன இன்ன விஷயத்தை விளங்கச்செய்கிறதென்று சுருக்கமாகக் கூறுவது. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றும் உள்ளது.

R. No. 360.

Paper. 11 × 9¾ inches. Foll. 27. Lines, 18–20 in a page. Tamil. Good

Transcribed in 1918–19 from a MS acquired through M.R.Ry. Mahamahopadhyaya V. Swāmināthaiyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

(*a*) பேரானந்தசித்தியார்.
PĒRĀNANDASITTIYĀR.

Foll. 1*a*—14*a*. Foll: 14*b*—16*b* are left blank.

. A treatise in which a disciple expresses his realization of the principles of the Śaivasiddhānta as taught to him by his master and thus brings out his greatness. The work contains 108 stanzas and is divided into 10 chapters the names of which are given in the Tamil remarks below.

Complete.

Beginning:

திருப்புன் முறுவல்.

அந்தோ விவன்றான் படும்பாட்டுக் களவே யில்லை யவைக்கீடாய்
நொந்தான் கொடிய பிறப்பிறப்பி னோவா திரங்கி நேர்நோக்கத்
தந்தாங் கெமது திருவருடான் சாரும் பரிசா லெமைக்காண
வந்தா னோகோ வெனுங்குணியோ வானோன் றிருப்புன் முறுவலே. (க)

திரிந்தே யிவன்பின் பணியாளாய்த் திரும்பிச் சிறிதும் பாராதே
யிருந்தே னோய்வில் பலவூழி யெண்ணி னிரைய சுவர்க்கங்கள்
பரிந்தான் யோனிப் படுகடல்கள் பறியா விந்நா ளெமைப்பார்க்க
விருந்தா னோகோ வெனுங்குணியோ வெம்மான் றிருப்புன் முறுவலே. (உ)

End:

இதுகாண் கன்ம மிதுமாயை யிதுவா ணவமிங் கிதுகாணீ
யிதுகா ணானிங் கிதுபதியென் றெல்லாப் பொருளு மறிவித்தா
யதனா லெல்லாப் பொருளினையு மறிந்தே யரன்றாள் சார்ந்திடலுந்
இதமாய் முன்போற் காட்டாதே யெங்கே போனாய் திருவருளே (க)

(* * * *)

மலமூன் றுனக்குப் பகையென்றும் வருநா னுனக்கு முறவென்றுஞ்
சலமார் விடையன் பதியென்றுந் தானே யுணர்த்தி யெனையாண்டா
யலவோ நீயுன் றனக்குமிகை யான்செய் தனனோ வெனையீசன்
கலவா திருந்தா லெனைப்பிரியக் கருதாய் கொல்லோ திருவருளே. (ச)

(* * * *)

பாலோ டிருக்குஞ் சுவையந்தப் பாலைப் பிரியாப் பரிசெனவுங்
காலோ டிருக்கும் வெளியந்தக் காலைக் கடவாக் கடனெனவு
மேலோ டிருக்குந் திருவருளு நீயும் வேறற் றுடனாயென்
பாலோ டிருக்கை யென்றதன்றோ பரமா முத்தி நிலைதானே. (கக)

Colophon:

பத்தாவது முத்திநிலைவினா முற்றும்.

(கு-பு.)—

இதில் ஒரு ஆசிரியர் தமக்கு உபதேசித்த அரிய விஷயங்களைச் சிஷ்யரொருவர் தாமனுபவிக்குங்காலத்திற் கூறி அவருடைய அருமையை விளக்குகிறார். இந்நூல் (1) திருப்புன் முறுவல், (2) மௌன முத்திரை, (3) பிடித்த முத்திரை, (4) கன்மக்கழற்றி, (5) மாயைக்கழற்றி, (6) ஆணவக்கழற்றி (7) போதக்கழற்றி (8) அருட்கழற்றி, (9) பொருட்கழற்றி (10) முத்திநிலை வினாமொழி எனப் பத்துப் பிரிவினையுடைய 108 செய்யுட்களாலாயது. இந்தப் பிரதியில் முற்றும் இருக்கிறது. இதை இயற்றியவர் பெயர் காலம் முதலியன விளங்கவில்லை.

(*b*) ஞானபூசை.

ÑĀNAPŪJAI,

Foll. 17*a*—21*a*.

A treatise laying down, the conduct of the worship of God Śiva in ccordance with the Śaivasiddhānta. The name of the author is not known.

Complete.

Beginning:

பணித்தவரு ளுடன்சந்தி பண்ணினோர்கள்
பயில்காலந் தருசந்தி பகர்வன்கங்குற்
புணர்த்தியசூக் கமவுடலாற் போகந்துய்த்துப்
பூதவுடற் போகத்துப் போதநாத
னுணர்த்தியபோ தணர்ந்துணர்வை யுயிரிறசாதித்
தொண்புனலா லுடற்சுத்தி யோங்குவித்துக்
கணக்குறுநீ றிடக்கையிலஞ் செழுத்தாற்குழைத்துக்
கலந்தொருமைத் திரிபுண்டரங் காட்டத்தீட்டே.

(* * * *)

இற்புகுந்து பதம்விளக்கி யிருந்துநீறிட்
டிலங்குபிரா ணயாம நியாதமெய்தி
யற்[க்]கியமொன் றுக்கியத னிற்சுத்தி யாக்கி
யண்ணறிரு வடிவிளக்கி யலர்கள்சாத்திச்
சிற்பரமாந் தற்பரத்துள் ளாழுந்திநீங்குந்
திங்ககலத் தூங்கொருமை திரிந்ததாகிற்
சொற்சிவமா ஞானநூ லோதலாதி
தொடங்கவையு மடங்கிலருட் டொழிற்றொடங்கே. (௪)

End:

எழுந்தலர் தூய்ப் பணிந்திருந்து நியாதமெய்தி
யெழிற்குரவ னிறைவன்று ளன்பினேத்தி
மொழிந்தசிவங் கோவிலினு ளாக்கித்தன்குருவை
மும்மலர்முன் பாத்தியாச மனவர்க்கிய முறையே
பொழிந்தலர்தூய்ப் பீடத்தூந் தண்டிலத்து மிறைஞ்சிப்
போக்குகவர்ச் சியஞான பூசையிது புனிதற்
கழுந்துபர குரவர்தரு மூச்சிட்ட நுகர்தற்
காமலவ மாவியமென் றறைந்தனவா கமமே. (௧௮)

Colophon:

ஞானபூசை விருத்தமுற்றும்.

(கு-பு.)—

இது சைவமத விஷயமானது. பூசையைச்செய்யுங்கிரமம் முதலியன இதில் விளங்கக் கூறப்பட்டுள்ளன. இதில் இந்நூல் முற்றுமிருக்கிறது. செய்தவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

(c) அத்துவாக்கட்டளை.

ATTUVĀKKATṬAḶAI.

Foll. 21a—23b.

Explains the characteristics of the six Attuvās or ways of leading one to salvation in accordance with the Śaiva siddhānta. These six ways are given in the Tamil remarks below.

Beginning :

அகார உகார மகார விந்துநாதமென்பது அகாரத்திலே நகாரமும் உகாரத்திலே மகாரமும், மகாரத்திலே சிகாரமும், விந்துவிலே வகாரமும், நாதத்திலே யகாரமும் ஆகத்தோன்றினபடி யறிக.

இவையிற்றுக்கு அத்துவாவின் முறையை நகாரத்திலே உாஉச-வகைப் பட்டன ; (?) அத்துவாவும் மகாரத்திலே அ௰க-வகைப்பட்டபதாத்துவாவும், சிகாரத்திலேஙு௰சூ-வகைப்பட்ட தத்துவாத்துவாவும், யகாரத்திலே ௫௰க-வகைப்பட்டவன்னத்துவாவும் யகாரத்திலே ௰க-வகைப்பட்ட மந்திராத்துவாவும் பிரணவத்திலே நிவிர்த்தியாதி அத்துவாக்கள் ரு-ம் ஆக அத்துவாக்கள் ஆறும்சதாசிவதேவர்க்குத் திருமேனியாகவும் சிருட்டித்திதி சங்காரம் திரோபவானுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியஞ்செய்து கிரியாபாவகத்துக்குத் தெய்வமாயிருக்கவும் பெறும்.

End :

இதன்மேல் நாதாந்தம் நூறுயிரங்கோடி யாதித்தப் பிரகாசம் மாத்திரையரைக்காணி முந்திரி சத்தி நூறுயிரங்கோடி யாதித்த வட்டத்தொளி; இதன்மேல் மூவிரல் நிற்கும் வியாபினி முத்திரை தங்கத்திலொளி மாத்திரையரைக்காணி முந்திரி ; இதன்மேல் மாத்திரை முந்திரிக்கு இதன்மேலுயிர் நிற்கும். சமனை நூறுயிரங்கோடி சந்திரோதயம் இதன்மேற் பரமசிவம் ஒரு விரல் நிற்கும் ; பிரகாசமின்னதென்று சொல்லப்படாப் பேரொளியால் நிவர்த்திக்குக் கீழ்மேல் சூழவெங்கும் ஒளிபோல நிறைந்து போக்குவரவின்றிப் புகுவரை அழிவின்றியாக்க மின்றியணுவிலணுவாம் ; அறிவிலரிதாயகண்டமுந்தாயுய் நிற்குமது அறிக.

Colophon :

அத்துவாக்கட்டளை முற்றும்.

(கு-பு.)—

இது சைவசித்தாந்திகள் கூறும் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் கலை என்ற அத்துவாக்கள் ஆறின் விரிவையும் அவற்றின் இலக்கணங்களையும், அவை ஈசுவரன் வடிவாக விளங்குவதையும் பிறவற்றையும் விளங்கச்செய்வது. இதை இயற்றியவா பெயர் முதலியன விளங்கவில்லை.

(d) நியதிப்பயன்.

NIYADIPPAYAN.

Foll. 24a—27b.

A tratise in which a disciple addresses his Guru Śīkāḷi Kaṇṇuḍaiya Sambandamūrtidēśikar for enlightening his mind on several matters relating to Śaivasiddānta. The work is based on the Sanskrit? Guhapaddhati.

Complete.

Beginning:

ஆகம சாரம தான குகன்பத் ததியதனிற்

பாகம தான பொருளை நியதிப் பயனதென்றே
வேகம தாக விளம்பிடு தற்கியல் வேணுபுரத்
தேகம தானசிற் குஞ்சரக் கன்றினை யேத்துதுமே. (க)

மந்திர மாவ தெதுகுரு வென்ற வசனமெது
சிந்தனை சேருஞ் சிவதீக்கை யென்றதென் செப்பியிடுஞ்
சுந்தர மான வுபதேச மேதெனச் சொல்லிடுவாய்
தந்திரந் தேருந் தமிழ்க்காழிக் கண்ணுடைச் சம்பந்தனே. (உ)

காலத்திலாரியனேமுதனுலவாகமதெழுந்து
சீலத்தி னூற்சிவ ரூபநினைக்குந் திறமதுவென்
கோலத்த மேவியங் கெத்தல மீதினிற் கொண்டிடுத
மூலத்து ளோர்புகழ் கண்ணுடைச் சம்பந்த சாற்றுவாயே (ங)

End:

பஞ்சப் பிரமத்தைப் பீசங் குறைத்துப் பகர்வதுவென்
விஞ்சச் சடங்கத்தைத் தீர்க்கும தாக விளம்புவதெ
னெஞ்சச் சொலாவவ் வுகாரத்தை யோதிடி னேதுபயன்
தஞ்சப் பதாம்புயத் தென்காழிக் கண்ணுடைச் சம்பந்தனே. (உங)

(* * * *)

சாற்றும் படந்தமு மந்தம தேதைத் தருமருளாற்
போற்றி நியதி முடிந்துகரை வந்து பூருவத்திற்
றோற்று மிரவி நமக்கார மேதெனச் சொல்லிடுவாய்
தேற்றும் பொருடெரி சீகாழிக் கண்ணுடைத் தேசிகனே (உக)

Colophon:

நியதிப்பயன் வினா முற்றும்.

(து-பு.)—

இது வடமொழியில் உள்ள குகபத்ததியின் சாரமான பொருள்களின் மொழி பெயர்ப்பாகும்; சீகாழிக் கண்ணுடைச் சம்பந்தமூர்த்தி தேசிகரை முன்னிலைப்படுத்தி அவருடைய சிஷ்யர்களுள் ஒருவர் வினாவிடையாக இயற்றியதாகத் தோற்றுகிறது. இந்தப் பிரதியில் வினா முற்றும் உள.

R. No. 361.

Paper, 11 × 9½ inches. Foll. 15. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M.R.Ry. Mahāmahōpādhyāya V. Swāminathaiyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

(a) வேதாந்தபத்ததி.

VĒDĀNTAPADDATI.

Foll. 1*a* to 5*b*.

A treatise in prose bearing on Śaiva Vēdānta. Herein a Guru explains to his disciple the meaning of the expression Tat Tvam Asi. The name of the author is not known.

Complete.

Beginning:

திருமந்திரப் பிரமாணம்.

"நீயது வாறுயென நின்றபேருரை
யாயது நாறு னென்னச்சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரரு
ளாயது வாயனந்தானந்தியாமே"

என்ற திருமந்திரத்தின் வேதப்பொருளாகிய மகாவாக்கியமாமுப்பத்தா றர்த்தங்களைப் பரமாசாரியன் அனுக்கிரகம்பண்ணும்படி.

தத்துவமசி: இதிற்பதங்கூட்ட தத்பதம் துவம்பதம் அசிபதம் என்று யிறறு;

இப்பதார்த்தமாவது: தத்பதமே அது; துவம்பதமே நீ; அசிபதமே ஆறுய்.

ஆகப்பதார்த்தம் கூட்டவே அது நீயாறுய் என்றது; எப்படி? அது வென்றசத்தம் சிவம் நீ என்ற சத்தம் சீவன் ஆறுயென்ற சத்தம் சிவசீவ ஐக்கியம் என்றுயிற்று.

பகவானே! சிவமாவது யார்? சீவனுவதேது? இவையிரண்டின் ஐக்கியமாவதெப்படி? என்று கேட்ட சீடனுக்குப் பரமாசாரியன் அனுக்கிரகம் பண்ணும்படி:—

சீவாத்மா நீதான்; சிவமாவதுநாம்; உனக்கு நம்மைத் தெரியாதபடி மறைத்ததே பாசம்.

End:

இப்படி அனுபோக சித்தாந்த கைவல்லிய சித்தியிலே யாதாமொருவர் ஒரு நிமிடமாகிலும், ஒரு கண்சிமிட்டுகிறபோதாகிலும், ஒரு நொடியாகிலும், பசுவின்முலைப்பீர் விழும்போதாகிலும், சொபா[ப](வ)த்தைக் கண்டுளோர் கள் சத்தியம்! சத்தியம்!! புனர்சென்மமில்லை என்றும், அதிவர்ணச்சிரமி யென்றும், ஏகரேசனென்றும் பழமறைகளும் திரிமூர்த்திகளும் துதிசெயக் கடவோனுமவனென்றேயறிக.

"அறிவாயறியாமை நீங்குமவனே பே
ரறிவாயொழித் தெங்குந்தானுன போத
னறிவாமவற்றினுட்டானுன போதஞ்
செறிவாகி நின்றவன் சீவனுமாமே"

"எல்லாமறிவ தறிவுதனைவிட்டே
யெல்லாமறிந்து மிலாபமங் கொன்றில்லை
யெல்லாமறிந்த விறைவனை நானென்னி
லெல்லாமறிந்தவிறை யென்னலாமே."
" துரிய மிருந்தநற் சொல்லுறும்பரனை
யரிய பரம்பர மென்பர்க ளந்தக
ரரிய பரம்பர மன்றது திக்கும்
அருநில மென்பதை யாரறிவாரே."

Colophon:

திருமந்திரப் பிரமாணம.
வேதாந்த[ப]பத்ததி.

(கு-பு.)—

இது சைவவேதாந்த விஷயமானது. இதில் தத்வமஸி வாக்யத்தின்பொருள்களும் பெருமையும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. வசன நடையாலாயது. இயற்றியவர்பெயர் முதலியன விளங்கவில்லை.

(*b*) சாதனசதுட்டயம்.
ŚĀDANACATUṬṬAYAM.

Foll. 6*a*—13*a*.

This is also a treatise on Advaita Vēdānta, The four fold necessary spiritual attainments for the realization of Brahman are explained. Incidentally the different kinds of instruments of knowledge and certain states of consciousness, etc., are also explained herein

Complete.

Beginning:

நித்தியா[வனி](நி)த்தியவஸ்துவிவேகம், இகாமுத்திரார்த்தபலபோகவிராகம் சமாதிஷட்கசம்பத்தி முமுட்சுத்துவம். ஆக ச.

இதில், நித்தியா[வனி](நி)த்தியவஸ்துவிவேகமாவன:—

பிரமமே நித்தியம்; மற்றுள்ளவெல்லாம் அ[னு](நி)த்தியம் எனறிடப்படுத்தல்.

இகாமுத்திரார்த்தபலபோகவிராகமாவன:—

இகலோகத்திலேயுள்ள வீடு, மாடு, ஆள், அடிமை முதலானபோகமும், பரலோகத்திலேயுள்ள அட்சரத்திரியமுதாதி போகங்களிலும், அதினாலே, வருகிற துன்பங்களையும் பலகால் நினைத்து அதிலே நரகம்போல வெறுப்பு வருவன.

சமாதிஷட்கசம்பத்தியாவன:—சமம், தமம், உபரதி, திதிட்சை, சமாதானம், சிரத்தை, ஆக சு.

சமமாவன:—சிரவணமனனுதிக்கன்னியமாயிருக்கிற பிரபஞ்சவியாபாரங்களிலும் போகாமல் அந்தக்கரணத்தை நிறுத்துதல்.

(* * * *)

சிரத்தையாவன :—அதிகாமுகனுக்குப் பெண்பித்துப் பிடித்தா(ற்)போலச் சிரவண மனனாதிகளிலும், குருதேவதாசாத்திரவாக்கியங்களிலும் தட்டுதலற வதினாலே வருகிற சேதங்களையுங் கணியாமற் சந்தோஷத்துடனே பரிபாலனம் பண்ணுதல்.

ஆகச் சமாதியாறுஞ் சொல்லப்பட்டது.

End:

பிரமாணமென்பது பிரத்தியட்சம் அனுமானம் உபமானம் சத்தமென்றும் தர்க்கத்துக்கு ச—விதமாயிருக்கும்; வேதாந்திகளுக்கு அர்த்தாபத்தி அபாவம் என்றும் சூ - விதமாக இருக்கும்; புராணிகர்க்கு ஐதிகத்துடனே கூடப் பிரமாணம் ஏழாக இருக்கும். (. . . . .)

இனி, ஐதிகப்பிரமாணமாவன :—லோகத்தார்வழக்கம்; அஃதேதென்னில் இந்தமரத்திலே பேயுண்டென்று நிர்ணயிக்கிறது (. . . . . . .)

மேலாலவத்தை நாலும் மோட்சத்தைக் கொடுக்கும்; இதிற் கீழாலவத்தையாவன :—அஞ்ஞானம், ஆபரணம், விட்சேபம் ஆக ௩. (. . . . .) அதுவே சீவன் முத்தியென்றுந்தடையற்ற ஆனந்தாபரண நிவர்த்தி என்றுஞ் சொல்லப்பட்டது; இப்படிமேலாலவத்தை நாலுஞ் சொல்லப்பட்டது.

சாதனசதுட்டய முற்றும்.

(கு-பு.)—

இது அத்வைதமத ஸம்பந்தமானது. அவர்கள் கூறும் நித்யாநித்திய வஸ்துவிவேகம், இகாமுத்திரார்த்த பலபோகவிராகம், சமாதி ஷட்கசம்பத்தி, முமுட்சுத்துவம் என்னும் ஸாதனசதுஷ்டயங்களின் இலக்கணங்களையும், அனுமானம், உபமானம், சத்தம், அர்த்தாபத்தி, அபாவம், ஐதிகம் முதலிய பிரமாணலட்சணங்களையும், மேலாலவத்தை, கீழாலவத்தைகளின் இலக்கணங்களையும், பாமரர், கன்மிகள், உபாசகர்களாகிய அஞ்ஞானிகளின் பிரிவுகளையும், சத்தாபரணம், சித்தாபரணம், ஆனந்தாபரணம் முதலியவற்றின் பிரிவுகளையும், விட்சேப இலக்கணமுதலியவற்றையும் கூறுவது. வசன நடையாலாயது. முற்றும் இருக்கிறது.

(c) தற்காட்சிமுப்பத்தாறுக்குவகை.
TAṞKĀṬṢIMUPPATTĀṞUKKU VAHAI.

Foll. 13*a*—15*b*.

A treatise explaining the 36 Tattvās or fundamental principles connected with self-realization.

Incomplete.

Beginning:

தற்காட்சிமுப்பத்தாறுக்குவகை.

விராட்டுவுக்குத் தூலபூதத்திற்குக்கடினை, திராவணி, தெகனை, வெகினி, அவகாசினி, ஆக ரு.

தூல பவுதிகத்துக்கு சுகடினை, சுதிராவணி, சுதேகனை, சுவேகினி, சுசுவகாசினி, ஆக ரு. ஆகப்பூதபௌதிகமாயை பத்துக்கும்விராட்டென்றுபேர்.

மாயாப் பிருதிவிமபாக்கு தாதா விசுவதிற்கு அசா பிரசாபதி, சதுமுகன் ரு.

தாதா—க, விசுவதிற்கு - க, சுசா - க, பிரசாபதி - க, சதுமுகன் - க, ஆக - ரு.

ஆகப்பத்தும் வயிசுவானரரென்றுபேர்.

விராட்டுக்கும், வயிசுவானரர்க்கும் அதிட்டான தற்சாட்சியாக இருக்கிற சைதன்னியம் பிரமா; இரணியகர்ப்பத்துக்குச் சூட்சுமபூதம் நந்தை, பத்திரை, சுரபி. சுசீலே, சுமுனை, ஆக ரு.

End:

பஞ்சப்பிராணனுக்கு வகை. வியானன்; ஆகாசாங்கிசம், சர்வமும் இருப்பன், தெய்வம் விசுவயோனி.

பிராணன் வாயுவின் காரியம்; சுவாசநிசுவாசம் செய்யும்; தெய்வம் வசிட்டன்.

அபானன் : அக்கினியம்சம், அன்னத்தைச் சரிப்பிக்கும், விசுவகர்த்தா.

சமானன் : அப்புவினங்கிசம், அன்னரசம் சரீரத்தில் (ப) ரப்பும், தெய்வம் அசெயம்.

உதானன் : பிருதிவியங்கிசம், கண்டத்திலே நின்று பிராணன் போகிற மூர்ச்சையிலே கடைவன்; அதிதேவதை அசன். ஆகப்பஞ்சப்பிராணனஞ்சும் அறியவும்.

(கு-பு.)—

இது தத்துவங்கள் முப்பத்தாறின்வகை முதலியவற்றை விளங்கக்கூறுவது. இயற்றியவர்பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுப்பெறவில்லை யென்று தோன்றுகிறது.

R. No. 362.

Paper. 10¾ × 9½ inches. Foll. 19. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M.R.Ry, Mahāmahōpādhyāya V. Swāminathaiyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

திருவாவடுதுறைமரபட்டவணை.

TIRUVĀVAḌUTṞAIMARAPAṬṬAVAṆAI.

Explains the leading principles of the Śaiva Siddhānta as inculcated by the pontiffs of the Tiruvāvaḍuturai Mutt in the form of similitudes and objections raised and answered. The name of the author is not known.

Complete.

Beginning:

"ஏகனனேகனிருள்கருமமாயை யிரண்டாகவியையாதியில்" ஏகனென்பது கர்த்தா; அனேகனென்பது ஆத்மா; இருளென்பது ஆணவமலம்; கருமமென்பது புண்ணியபாவமாகிய கருமமலம்.

மாயை யிரண்டென்பது சுத்தமாயை அசுத்தமாயையுமாம். இவையாறு பொருளுமொருகாலத்திலேயுள்ளவல்ல; அனாதியிலே நித்தியமாயழியாததாயிருக்கும்.

ஏகனாகிய கர்த்தாவுக்கு எண்ணிறந்த தன்னியல்பு குணமுண்டு; அதில் இரண்டு குணஞ் சொல்லுகிறோம்; அஃதேதெனனில், ஒருவருமறிவியாமற் றானேயறிகிற குணமொன்று; ஆத்துமாக்களுக்கு அறிவிக்கிற குணமொன்று. ஆக உ.

இதற்கு வசனம், சித்தியாரில் ரு-ல் "அறிதருசிவனே யெல்லாமறிந் தறிவித்து நிற்பன்" என்றது காண்க.

அனேகனாகிய ஆத்மாவுக்கு எண்ணிறந்த தன்னியல்புக்குணமுண்டு; அதில் இரண்டு குணஞ்சொல்லுகிறோம்:—

அறிவித்தாலறிகிற குணமொன்று; பிறருக்கு அறிவிக்கமாட்டாத குணமொன்று ஆக உ.

இதற்குச் சிவஞானபோதம் அ-ல், "அறிவித்தாலன்றி யறியாவுளங்கள்" எ-ம், சித்தியில், "அறிந்திடுமறிவனன்றும்" எ-ம் வருவதுகாண்க.

End:

ஆத்மாவுக்கு எல்லாவற்றிற்கு முந்தினது பக்குவம்; அதற்குப் பிந்தினது சிவபுண்ணியம்; அதற்குப் பிந்தினது மலபரிபாகம்; அதற்குப் பிந்தினது சத்திநிபாதம்; அதற்குப் பிந்தினது இருவினையொப்பு; அதற்குப் பிந்தினது ஆசாரியர் திருமேனிகொண்டெழுந்தருளிவருதல், அங்குத்தியனுக்கிரகம் பண்ணப்படாநின்ற ஞானசாத்திரம்; இது மோட்சமடையும் முறைமை யெனவறிக.

Colophon:

மரபட்டவணைமுற்றும்.

(கு-பு.)—

இது திருவாவடுதுறை மடத்தார் கூறும் சைவசித்தாந்தத்தின் முடிந்த பொருளைத் தடைவிடைகளானும், உவமை முகத்தானும் விளக்குவது. வசன நடையாலாயது. இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை. இந்தப்பிரதியில் முற்றுமிருக்கிறது.

R. No. 363.

Paper. 11 × 9¾ inches. Foll. 33. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1917—18 from a MS. acquired through M. R. Ry. Mahamahopadhyāya V. Swaminātha Ayyār Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

சித்தாந்தப்பஃறொடை.
SIDDHĀNTAPPAHṚOḌAI.

This work is considered to be one of the Paṇḍāraśāstirams. Herein the author Ambalavāṇadēśikar brings out the principles of

Śaivasiddānta as taught to him by his Guru Namaccivāyadēśikar of Tiruvāvaḍuturai and thus extolls his greatness. This work does not appear to have been printed.

Complete.

Beginning:

செய்யாப் பணிபலவுஞ் செய்வேன் றிருவுளத்திற்
செய்யும் பணிசிறிதுஞ் செய்தறியே—னுய்யுநெறி
யெத்தால் வருமடியார்க் கின்பா வடுதுறைக்கு
ளத்தா நமச்சிவா யா.

திருவாரு ஞானத் திலதத்தா னீற்றான்
மருவாரு மேனி வளத்தா—னொருவாத
கண்டிகை சென்னி களங்காது மார்புகரங்
கொண்டிலங்கு மேனிக் குறியுடையான்—மிண்டிலங்கப்
பேதித்த மும்மலமாம் பெற்றியெனு முப்புரத்தைச்
சேதித்த பொல்லாச் சிறுநகையான்—சாதித்த
காமமெனு மாரன் கனலோ டெரிந்துவிழச்
சேம விழிதிறந்த சித்தத்தான்—பூமிசையிற்
றோற்றமிறப் பென்னுஞ் சொலுங்காலன் மாய்ந்துவிழ
மாற்றுந் திருவடியால் வாட்டினேன்—கூற்றமெனு
மாணவமுஞ் சஞ்சிதமு மற்றுவிழ நோக்களித்துப்
பூணுங் கருணைநெறிப் பொற்பினன்—வீணவமா
மாயை மயக்க மடிய மலர்க்கரத்தை
நேபமுடன் சென்னிவைத்த நேயத்தான்—காயமுட
னேங்கு பொருளு முறுமுயிரு மொன்றாக
வாங்குங் கருணை மதியுடையா—னீங்காத

End:

அண்டர்தொழும்
வேதா ரணியத்தின் மெய்கண்ட சந்ததிக்கோர்
ஞாதா வெனப்பேரு நண்ணியே—யோதா
துணர்ந்தார்க் குலவாக் கிழிவழங்கி யொப்பின்
மணந்தான் பசுக்குலத்தை மாற்றிப்—புணர்ந்த
திருவா வடுதுறைவாழ் தேசிகனு மென்னே
வொருவாத் தொழிற்பெயரு முற்றே

(* * * *)

எல்லோரும்
நண்போ டுரைத்திடவே நன்னமச்சி வாயனெனப்
பண்போ டுயர்நாமம் பற்றியே. (. . . . .)
வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்
மாடையும் வாழ்க்கை மனையையுமே—நீடியதோர்
நெஞ்சுவிடு தூதி னிகழ்த்துமுப தேசமுறு
வஞ்சகரை நெஞ்சின் மருவனென்பாள்

(* * * *)

முத்திநிலை

சொற்ற சிவஞான போதத்தைச் சூழாம
லற்றவர்க்கே பொய்க்கடவு ளாகுமென்பாள்
(* * * *)

பூவி
லுயர்ந்தமணம் போல வொழியாம னின்ற
நயந்த கருணை நலம்போற்றி—யியைந்த
குருவடிவைப் போற்றிக் குலாவிமற் றென்று
மருவறியே னென்ன மதித்தாள்.

ஆகத் தறிவை யகற்றியவ் வாவியினு
ளூகத் தனுவை யுறவைத்துத்—தேக
வறிவாக்கி மங்கையரு ளாணுண்மற் றென்றைப்
பிறிவாக்குந் தேசிகனைப் பெற்று.

Colophon:

காயத் திருதவருட் கன்னி யடியிணையைத்
தோயத் தொடர்ந்தாண்ட . . . . . தேவரு—மாயத்தான்
றுய்யாபுன் சொல்லாற் றொடுத்தேன் புனைந்தாளென்
னையா நமச்சிவாயா.

சித்தாந்த மென்னத் தெரிந்த பஃறொடையிற்
சத்தாந்த முந்நூற்றெண் பத்தஞ்சாய்—முத்தாந்தஞ்
சொன்னான் றிருவா வடுதுறையைச் சூழ்ந்தார்க்கு
மன்னாகு மம்பலவாணன்.

சித்தாந்தப்பஃறொடை முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் சைவசித்தாந்தத்தைச் சார்ந்த பண்டாரசாத்திரங்களுள் ஒன்று. திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகர்மீது அவர் சிஷ்யருள் ஒருவராகிய அம்பலவாண தேசிகர் இயற்றியது. இதில் நமச்சிவாயதேசிகர் தமக்கு உபதேசித்த சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இன்னவெனக்கூறி அவரது பெருமைகளை விளக்குகிறார். கலிவெண்பாவாலாகியது. இன்னும் அச்சிடப்படவில்லை. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

R. No. **364**.

Paper. 11 × 9¾ inches. Foll. 45. Lines, 20 in a page. Tamil. Good.

Transcribed in 1918-19 from a MS. acquired through M. R. Ry. Mahāmahōpādhyāya V. Swaminatha Ayyar Avargal, Tamil Pandit, Presidency College, Madras.

சிவானுபோகத்திரட்டு.

ŚIVĀNUBŌGATTIRAṬṬU.

A collection of stanzas relating to Śaivasiddānta culled out from different works the names of which are given at the end of the extract.

The collection contains 305 stanzas and is subdivided into 63 sections or chapters, the names of which will be found given in the Tamil remarks below.

Complete.

Beginning :

பாயிரம்.

தந்தை தாயுமெய்த் தகவுடையுறவுஞ் சாலுங்கல்வியுந்
        தகுமுயிர்த்துணையுஞ்
சிந்தையாருநற் சீலமும்வலியுந்
        திருவு மின்பமுஞ் சிதைவிலாவறிவு
முந்தை யாமுளத் துவகையு முயிரு
        மூலமுத்தியு மொழிவருஞ் சமைவு
மெந்தையாகிவந் தேழையேனையுமா
        ளிறைவனார்கழ லாகுமென் றனக்கே.

ஆதியாயனாதியாகி யந்தமாயனந்தமாகிச்
சோதியா யிருளு மாகித் தொந்தமாய்த் தொந்தமில்லா
நீதியாய் நினைவதாகி நினை வரி தென்று வேத
மோதிய பரமானந்த வொளியினை யுளத்தில் வைப்பாம்.

(*   *   *   *)

ஓங்குமுயிர்க ளொருநான்கு முணரும்வண்ண முணராமற்
பாங்கினுலகமுழுதினையு மறைத்தபடலப் பெருமாயை
யாங்கு வேரோ டழியும்வ[ண்]ண மகமும் புறமு முறநினைந்து
தீங்கி லின்பத் திகழொளியாஞ் சிவப்பிர காசத் தினைப்பணிவாம் (க)

திரட்டு.

End :

மங்கலவாழ்த்து.

மன்னர்கோல்மனு வி(ன்)னெறியிற்புக மழைபொழிந் துலகெல்லா
மன்ன நீடுக வருணலம் பெருகுக வாண்டவன் கழல்சூடிப்
பின்னமாகிய பேதைமை நீங்குக பேருலகி துவன்றே
யென்னையாளுடை யிறையருட் சொரூபனை யானிரந்தது தானே (க)

(*   *   *   *)

அஞ்செழுத்தும் வாழி (வாழி)யருணை வாழி யருணையான்
கஞ்சமுற்ற சரணம் வாழி கருணைவாழி கருணைபோன்
மஞ்சுபெற்ற வானம்வாழி வையம் வாழி வையமேற்
றஞ்சமுற்ற நீறுவாழி சைவம்வாழி வாழியே (௩)

Colophon :

ஆக ௩௱௫.

சிவானுபோகத்திரட்டு முற்றும்.

(கு-பு.)—

இது சைவமத விஷயமானது.

(1) கடவுள் வாழ்த்து.
(2) அருளிறைவணக்கம்.
(3) பஞ்சாக்கரதரிசனம்.
(4) அட்டாக்கரம்.
(5) தீர்த்தசங்கற்பம்.
(6) விபூதி.
(7) சிவஞான பூசை.
(8) சைவம்.
(9) சிவயோக தாரணை.
(10) சிவ வேடம்.
(11) வேதச் சிறப்பு.
(12) ஆகமச் சிறப்பு.
(13) அறிஞருரைச் சிறப்பு.
(14) கற்றோரொடுக்கம்.
(15) துறவி வயிராக்கியம்.
(16) ஞானி மான்மியம்.
(17) ஞானி சீலம்.
(18) ஞானி யிலக்கணம்.
(19) ஞானி பூசைச் சிறப்பு.
(20) ஞானியை யிகழ்ந்தோர் கேடு.
(21) ஞானி காய மழிவு.
(22) தன்பக்கமறிந்தோருபதேசம்.
(23) வன்னுச்சிரமம்.
(24) பிரமசரியம்.
(25) அதிவன்னுச்சிரமம்.
(26) அனுசாரம்.
(27) நிலையாமை.
